நம் வழி வேளாண்மை

பருவம் 31 அக்டோபர் – டிசம்பர் 2022 இதழ் 3

19–11–2022 முதல் 29–11–2022 வரை புதுடில்லியில் நடைபெற்ற
மக்கள் கண்டுபிடிப்பு திருவிழாவின் துவக்கவிழாநிகழ்ச்சி

இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

நம் வழி வேளாண்மை

பருவம் 31 அக்டோபர் – டிசம்பர் 2022 இதழ் 3

ஆசிரியர்
பெ. விவேகானந்தன்

நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

நம்வழி வேளாண்மை குழுமம்
பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பள்ளி ஸ்ருஜனா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே

நம் வழி வேளாண்மை
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலைபேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

ஆங்கில இதழ் முகவரி
Prof. Anil Gupta,
Honey Bee,
SRISTI, AES Boys Hostel Campus,
Near Gujarat University Library & SBI Bank,
Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,
email: honeybee@sristi.org

பாரம்பரிய அறிவும், அறிவியலும்

கிராமங்களில் நிலவி வரும் பாரம்பரிய அறிவு அறிவியலுக்கும் அப்பாற்பட்டு உள்ளது. இன்னும் இதற்கு விடை காண அறிவியலுக்கு காலம் எடுக்கும். உதாரணமாக அமாவாசை அன்று பூமியில் விதைத்தால் அதன் பலன் பற்றி அறிவியலால் இதுவரை விளக்கப்படவில்லை. ஆடி அமாவாசை அன்று காய்கறிப்பயிர் விதைப்பது பாரம்பரியமான செயலாகும். பாரம்பரிய ஜோதிடம், கோள்களின் நிலைப்பாடு கொண்டு உயிராற்றல் வேளாண்மையில் இந்தத் தத்துவம் விளக்கப்பட்டுள்ளது. சந்திரன் நீர் கிரகம் ஆதலால் அமாவாசை அன்று பூமியில் நீர்ச்சத்து குறைவாக இருக்கும். இதனால் இச்சமயத்தில் விதைக்கப்படும் விதைகள் நீர்ச்சத்து மிகுதியினால் உண்டாகும் பூஞ்சான் போன்ற பயிர் நோய்கள் தாக்குவதில்லை. இதே காரணத்தினால்தான் மரம் வெட்டுவது குறிப்பாக அகத்திமரம் வெட்டுவது தேய்பிறையில் அல்லது அமாவாசையில் செய்யச் சொல்வர். இச்சமயத்தில் நீர்ச்சத்து குறைவினால் பூச்சியினுடைய வளர்ச்சி குன்றி மரத்தை உலுக்காது. அதேசமயம் வளர்பிறை பௌர்ணமியில் மரம் வெட்டினால் மரச்சட்டம் விரைவில் உலுத்துவிடும். அமாவாசையில் பயறு விதைகளை காயவைப்பது வழக்கம். இதனால் பூச்சிநோய்கள் முற்றிலும் கட்டுப்படுவது நீர்ச்சக்தி குறைந்த வறட்சியினால்தான் என்றால் மிகையாகாது.

அமாவாசையில் குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க மருந்து கொடுப்பர். இந்த வேளையில் கொடுப்பதால் வளர்ச்சிகுன்றிய கிருமிகளை விரைவில் முடக்கி விடலாம். திருச்சி பகுதியில் அமாவாசை அன்று வேப்பெண்ணெயில் வெள்ளைப்பூண்டு சேர்த்து காய்ச்சி இதனை சங்கில் குழந்தைகளுக்கு கொடுப்பார்கள்.

தற்சமயம் நவீன முறையாக அல்பெண்டசோல் என்ற ஆங்கிலமருந்தினை குடற்புழு நீக்கத்திற்குப் பயன்படுத்துகின்றனர். இதன் பின் விளைவுகள் என்ன என்பது சாதாரண மக்களுக்கு தெரிய வாப்பில்லை. கால்நடைகளுக்கும் தற்சமயம் ஆண்டிபயாடிக்ஸ் மருந்தினால் கிருமிகளுக்கு எதிர்ப்புசக்தி கூடி மருந்து செயல்படாமல் உள்ளது. அதேசமயம் சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கிறது. இதனைக் கருத்தில்கொண்டு உலக சுகாதார நிறுவனம் பல நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை தடை செய்தும், பயன்பாட்டினை குறைந்த அளவு பயன்படுத்தவும் ஆலோசனை சொல்கிறது.

மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்கள் சர்வதேச ஆண்டு 2026

(International Year of Rangelands and Pastoralists 2026)

"மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்கள் சர்வதேச ஆண்டு 2026"என அறிவிக்கும் தீர்மானம் நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் 15.03.2022 அன்று நிறைவேற்றப் பட்டது. இந்த தீர்மானத்தை மங்கோலியா என்ற நாடு முன்மொழிந்தது. இதற்கு இந்தியா உள்பட 60 நாடுகளும் மற்றும் பன்னாட்டு கால்நடை ஆய்வு நிறுவனம் உள்பட 300க்கும் மேற்பட்ட அமைப்புகள் ஆதரவு அளித்தன.

29–10–2022ல் மதுரையில் நடைபெற்ற மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்கள் சர்வதேச ஆண்டு 2026 விழிப்புணர்வு முகாமில் மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் மூர்த்தி கலந்துகொண்டு துண்டுப்பிரசுரம் வெளியிட்டார்.

வளங்குன்றா வளர்ச்சி குறிக்கோள்கள்படி 2030க்குள் உலகில் வறுமையை எந்த வடிவிலும் தலை தூக்காது ஒழிக்க வேண்டும். நாட்டில் பசி, பஞ்சம் இல்லாது இருக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு சாதகமாக மண்ணின் வளம் கூட்டி உற்பத்தித் திறனை அதிகரித்தல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பல்லுயிர் பன்மயம் பாதுகாப்பு, பருவநிலை மாறுபாட்டிற்கு ஈடு கட்டுதல் போன்ற திட்டங்களுக்கு உறுதுணையாக மேய்ச்சல் நிலம் பாதுகாத்து இதனை நம்பி பாரம்பரிய முறையில் கால்நடை வளர்க்கும் கிடைக்காரர்களை ஆதரிக்க வேண்டும் என்று ஐ.நா. சபை கூறியுள்ளது. இதனை செயல்படுத்த உணவு மற்றும் வேளாண்மை அமைப்பிற்கு (Food and Agriculture Organization) வேண்டுகோளும் விடுத்துள்ளது.

பூமியின் நிலப்பரப்பில் சரிபாதியாக மேய்ச்சல் நிலங்கள் 46% ஆக இருப்பதால் இவை மிகப்பெரிய சூழல் மண்டலம் ஆக விளங்குகிறது. எனினும் மேய்ச்சல் நிலங்கள் முறையாக பாதுகாக்கப்படாததால் பெரும் அழிவுக்கு உள்ளாகியிருக்கிறது உலகெங்கிலும் இருக்கக்கூடிய மேய்ச்சல் நிலமானது 80 கோடி மேய்ச்சல் சமூகத்தினரின் வாழ்வாதாரத்திற்கும் உணவுப் பாதுகாப்பிற்கும் ஆதரவாக விளங்குகிறது. மேய்ச்சல் சமூகத்தினர் உற்பத்தி செய்யும் கால்நடைப் பொருட்களை தங்களுக்குள் வைத்துக் கொள்ளாமல் உலகெங்கும் வாழும் லட்சக்கணக்கான மக்களுக்கு கொடுத்து வருகிறார்கள்.

ஒன்றுக்கும் உதவாத நிலத்தில் காணப்படும் புல், பூண்டு இவைகளை மேய்ந்து கிடைக்காரர்களுக்கு வாழ்வாதாரம் வழங்கும் கால்நடைகள் இயற்கையான முறையில் பராமரிக்கப்படுகின்றன. இதனால் சமுதாயத்திற்கு தேவைப்படும் உணவும் (பால், இறைச்சி, முட்டை) உபரி பொருட்களாக ரோமம், தோல் போன்றனவும் கிடைக்கின்றது. நமது நாட்டில் 53 சதவீதம் பாலும், 74 சதவீதம் இறைச்சியும் கிடைகளிலிருந்து கிடைக்கின்றதாகக் கூறப்படுகிறது. இதன் மூலம் மக்களுக்கு மலிவான சுத்தமான, புரதச்சத்து நிறைந்த உணவாகவும் கிடைக்கின்றது. வெளிநாட்டிற்கு கால்நடை பொருட்கள் ஏற்றுமதியால் அந்நியச்செலாவணியும் (3% GDP) கிடைக்கிறது. இது தவிர பாரம்பரிய கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் ஜல்லிக்கட்டு, ரேக்ளா பந்தயம், உழவுத்தொழில், மாட்டு வண்டிகளுக்கு தேவைப்படும் காளைகள் கிடைகளிலிருந்து பெறப்படுகிறது. கிராமப்புறங்களில் 70 சதவீதம் மக்களுக்கு பாரம்பரிய கால்நடை வளர்ப்பு மூலம் வேலை வாய்ப்பும் கிடைக்கின்றது.

இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட 202 கால்நடை இனங்களில் 75 இனங்கள் கிடைக்காரர்களிடம்

காணப்படுகின்றன. இந்தியாவில் 1.3 கோடி கிடைக்காரர்கள் கால்நடைகளை பராமரித்து வருகின்றனர். இவர்கள் 46 சமூகங்களைச் சார்ந்தவர்கள். தமிழ்நாட்டில் தோடர், யாதவர், குறும்பக் கவுண்டர், வன்னியர் போன்ற சமூகத்தைச் சார்ந்தவர்கள் கிடைக்காரர்களாக உள்ளனர். கடந்த 60 ஆண்டுகளில் பாரம்பரிய மேய்ச்சல் நிலத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றம், கால்நடை செல்லும் நடைபாதை இடைமறிப்பு ஆகியன மேய்ச்சல் சமூகத்தினர் அனுபவித்து வரும் கொடுமைகளாகும். இச்சூழலிலும் கூட மேய்ச்சல் சமூகத்தினர் தங்களுக்கே உரிய பாரம்பரிய அறிவையும் திறனையும் பயன்படுத்தி வாழ்ந்து வருகிறார்கள். மேய்ச்சல் சமூகத்தினர் பல்லுயிர் பெருக்கத்தை அதிகரிப்பதிலும் சுற்றுச்சூழலுக்கு உதவும் வகையிலும் மீத்தேன் வெளிபாட்டை குறைப்பதிலும், நீர்நிலைகளை பாதுகாப்பதிலும் முக்கிய பங்காற்றுகிறார்கள். வனத்திலுள்ள மரங்களைவிட புல்வெளியிலுள்ள பூமி கரிமத்தை கிரகித்து இருத்திக்கொள்ளும் திறன் (carbon storage) அதிகமாக உள்ளதாக அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மேய்ச்சலில் தொடர்ந்து ஈடுபடும் கால்நடைகளால் மேய்ச்சல் நில பூமியில் மிகப்பெரிய அளவில் கரிமம் சேமிக்கப்படுகிறது. காலநில மாற்றத்தை தணிப்பதற்கு வளம்குன்றா மேய்ச்சல் நிலமும், கிடைக்காரர்களின் பாரம்பரிய மேய்ச்சல் முறையும் அவசியமாகிறது. மேய்ச்சல் முறையில் கால்நடை வளர்ப்பதற்கு மிகக் குறைவான எரிபொருளே தேவைப்படுகிறது. மேய்ச்சல் நிலம் இயற்கையின் உதவியால் சுயமாகவே தன்னை உயிர்ப்பித்துக் கொள்கிறது. மேய்ச்சலின் போது கால்நடைகள் நிலத்தின் மேல் பகுதியில் உள்ள புல் மற்றும் சிறு தாவரங்களை உண்பதால் காட்டுத் தீ ஏற்படாமல் தடுக்க மேய்ச்சல் முறை உதவுகிறது. மேய்ச்சல் முறை கால்நடை வளர்ப்பு இயற்கைக்கு உகந்த உற்பத்தி அமைப்பாக இருப்பதோடு, நிலையற்ற காலநிலை மாறுபாடுகளுக்கு இடையில் உற்பத்தி மற்றும் வளங்குன்றா வளர்ச்சிக்கும் சமநிலையை உருவாக்குகிறது.

நீடித்த மேய்ச்சல் முறை மற்றும் வளமான மேய்ச்சல் நிலங்கள் மூலம் கிடைக்கின்ற நன்மைகள் குறித்த செய்திகளை உலக அளவில் எடுத்துச் செல்வதிலும், விழிப்புணர்வு ஏற்படுத்துவதிலும் **மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்கள் சர்வதேச ஆண்டு 2026** முனைப்பாக செயல்படும். மேய்ச்சல் முறையில் கால்நடை வளர்ப்பதை வலுப்படுத்துவதில் பொறுப்பான முதலீடுகளை கொண்டு வருதல், காலநிலை சிக்கலை எதிர்கொண்டு வறுமையை ஒழித்தல், பல்லுயிர் பெருக்கத்திற்கு வருகின்ற ஆபத்துகளை சமாளித்தல், நீடித்த உணவு உற்பத்தி முறையை உருவாக்குதல் தொடர்பான கொள்கை சார்ந்த விவாதங்களில் மேய்ச்சல் சமூகத்தினர் பங்கு கொள்வர். இந்த விவாதங்களில் மேய்ச்சல் சமூகத்தினருடன் விஞ்ஞானிகள் மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைத்தொழிலின் பெருமைகளை எடுத்துரைப்பார்கள். – ஆசிரியர்

மேலும் விவரங்களுக்கு:
இணையதளம்: www.iyrp.info

கஞ்சிக்குழி கிராமம் முழுவதும் இயற்கை முறையில் காய்கறி சாகுபடி

கேரளா மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் கஞ்சிக்குழு கிராமத்தில் அங்குள்ள 8500 குடும்பங்களும் காய்கறிகளை இயற்கை முறையில் சாகுபடி செய்து பயன்பெறுகின்றனர். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் இப்பகுதியில் விவசாயம் முற்றிலுமாக குறைந்து தென்னை நார்த் தொழில் மூலம் வருமானம் எடுத்து வந்தனர். நிலமும் விவசாயத்திற்கு ஏற்றதாக வளமற்றதாக இருந்தது. 1994ல் கஞ்சிக்குழி

பஞ்சாயத்து தலைவர் திரு. ராஜு வெளியூரிலிருந்து காய்கறிகளை விலைக்கு வாங்காமல் உள்ளூர் மக்களால் விளைவிக்கும் யோசனையைத் தெரிவித்தார். இதன்படி பஞ்சாயத்து மூலமாக காய்கறிச் செடிகள், விதைகள் தருவிக்கப்பட்டு விவசாயம் மேற்கொள்ள துவங்கினர். "குடும்பஸ்திரி" என்ற மகளிர் குழு திட்டத்தில் காய்கறி நாற்றங்கால் அமைத்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் 50 கன்றுகள் (பாகை, புடலை, சுரை, வெண்டை, பீன்ஸ், காளிபிளவர்) கொடுக்கப்பட்டன. வருடத்தில் 3 போகம் சாகுபடி செய்ய அறிவுறுத்தப்பட்டனர். எந்த நிலமும் தரிசாகப் போடாமல் சாகுபடி செய்ய அறிவுறுத்தப்பட்டது. நிலமில்லாதோர் மகளிர்குழு உறுப்பினர்களிடம் தரிசு நிலம் கொடுக்கப்பட்டு காய்கறி செடிகள் பயிரிட ஊக்குவிக்கப்பட்டனர். இதனை பஞ்சாயத்தில் கிராமசபை கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றி எல்லா வகை விதை, உரம், நாற்றுக்கள் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால் வருடத்திற்கு சுமார் 50 லட்சம் நாற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, விநியோகிக்கப்படுகின்றன. இதற்கு தேவைப்படும் இயற்கை உரங்கள் இடுவது, பூச்சி கட்டுப்பாடு போன்றன கற்றுத்தரப்பட்டன. துவக்கத்தில் பஞ்சாயத்தில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. நிதியும் ஒதுக்கப்பட்டது. உரம் தரவும், பூச்சிகள் கட்டுப்படுத்தவும் செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டது. தற்பொழுது காய்கறிகள் விளைச்சல் கூடி கஞ்சிக்குழு குடும்பங்களின் தேவைபூர்த்தியாகி உபரியானதை வெளியூர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. சாலையோரங்களில் பல இயற்கை வேளாண்மை காய்கறி விற்பனை அங்காடிகளும் உருவாகி கிராமமக்களுக்கு வேலை வாய்ப்பும் வருமானமும் தருகின்றது. சில குடுமங்கள் மாதத்திற்கு ரூ. 50,000 வரை காய்கறி சாகுபடியில் வருமானம் எடுக்கின்றனர். சென்ற வருடம் பஞ்சாயத்திற்கு ரூ. 14 கோடி வருமானம் கிடைத்ததாக திரு. ராஜு கூறுகின்றார்.

நன்றி : லீசா இந்தியா – இதழ் 3 செப்டம்பர் 2022

தெற்கு அந்தமானில் தோப்பு பராமரிப்பு

தெற்கு அந்தமான் தீவில் செல்லம்மாள் (வயது 65) 60 வருடங்களாக வாழ்ந்து வருகிறார். இவருக்கு 8 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் 45 வருடங்களுக்கு முன் தென்னை மரம் நட்டார். இதில் 250 மரங்கள் உள்ளன. தென்னையில் காய்ப்பு குறைந்து தேங்காய் விலை குறைவாக இருந்தது. இச்சமயம் தென்னையில் ஊடுபயிராக பாக்கு, வனில்லா, மிளகு, வெற்றிலை, பப்பாளி, இஞ்சி, சேனைக்கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, சப்போட்டா, கறிவேப்பிலை, வாழை, மஞ்சள், காய்கறிகள், கொய்யா, அண்ணாசி போன்றன பயிர் செய்து வருமானம் எடுக்கலானார். மழைக்காலத்தில் பெய்யும் நீரை இரண்டு குளங்களை வெட்டி நீர் சேமித்து மீன் வளர்ப்பும் செய்கிறார். மண் அரிமானம் தவிர்க்க சரிவில் 5 வகையான மூங்கில் மரங்களை நட்டார். பின்னர் மூடாக்கு முறையில் காய்ந்த மட்டை, கழிவுகளை பயன்படுத்தி மரங்களைச் சுற்றி அடுக்கி வருகிறார். குப்பையை நிலத்திலிட்டு குப்பையை மழை நீர் அடித்துச் செல்லாமலிருக்க கழிவு மட்டைகளை அடுக்கி தடுத்து விடுகிறார். தற்சமயம் இயற்கை திரவ உரங்களான ஜீவாமிருதம், பஞ்சகவ்யா பயன்படுத்தி இரசாயன உரங்களை தவிர்த்து விட்டார். வருமானம் தரும் சீமை கொத்தமல்லி எனப்படும். தனியாபத்தி எனப்படும் தாவரத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்தி விதை உற்பத்தி செய்து நல்ல விலைக்கு விற்பனை செய்கிறார். இதனால் பண்ணையில் செலவுகள் குறைந்து தென்னை மகசூலும் கூடுகிறது. ஊடு பயிர்களால் கூடுதல் வருமானமும் கிடைக்கிறது.

தென்னையில் மகசூல் கூட்டுதல்

தென்னைக்கு ஊடே வெற்றிலை ஒரு ஏக்கரில் பயிரிடப்படுகிறது. தரையிலும் படர்கிறது. வெற்றிலைக்கு வைக்கும் மக்கிய குப்பையும், நீரும் தென்னைக்கும் கிடைப்பதால் நல்ல மகசூல் கிடைக்கிறது. வருடத்திற்கு தென்னையிலிருந்து 28,570 காய்கள் வெட்டப்படுகின்றன.

தனியாபத்ரியில் விதை உற்பத்தி

வெளிநாட்டிலிருந்து தருவித்த தனியாபத்ரியை முதலில் பசுமைக் கூடத்தில் பயிர் செய்தார். முதல் 2 ஆண்டுகள் நல்ல மகசூல் கிடைத்தது. பின்னர் 3 வது வருடம் நோய் தாக்கப்பட்டுக்கு உள்ளானது. தற்சமயம் பசுமைக்கூட முறையை கைவிட்டு வட்டமாக பாத்திகளில் பயிரிட்டு சுற்றிலும் தென்னை மர மட்டைகளை அடுக்கி விடுவதால் வழியும் மழை நீரால் பாதிப்பில்லை. விதைகளும் உருவாகி இனப்பெருக்கம் செய்ய முடிகிறது.

மண் அரிமானம் தடுத்தல்

நிலத்தின் சரிவுகளில் மரங்களை நட்டு சரிவைத் தடுத்துள்ளார். மண் அரிமானம் தடுக்க மூங்கில் மரங்களை நட்டுள்ளனர். 5 வகையான மூங்கில்கள் இருக்கின்றன. தென்னை மூலம் ஆண்டிற்கு ரூ. 1.75 லட்சம் வருமானம் கிடைக்கிறது. வெற்றிலையில் வருடத்திற்கு ரூ. 1.20 லட்சம் வருமானம் வருகிறது. பப்பாளிப்பழம் ரூ. 55,000, மரவள்ளி மற்றும் சேனைக்கிழங்கு ரூ. 60,000, வாழைப்பழம், மிளகு, லவங்கம் மூலம் ரூ. 52,000, மீன் ரூ. 40,000, இஞ்சி ரூ. 1 லட்சம், ரூ. 57,000 சப்போட்டா மற்றும் அண்ணாசிப்பழம் ரூ. 30,000, காய்கறிகள் ரூ. 1.5 லட்சம் கிடைக்கிறது. மொத்த வருமானம் ரூ. 8,39,000. இது வரைக்கும் 200 க்கும் மேற்பட்ட விவசாயிகள் இந்த பண்ணையை பார்த்து விட்டு ஆலோசனை பெற்று சென்று உள்ளனர். 10க்கும் மேற்பட்ட விவசாயிகள் இயற்கை விவசாய முறையை பயன்படுத்தி தங்கள் வருமானத்தை கூட்டி உள்ளனர். கல்லூரி மாணவர்கள் இந்த பண்ணையில் 2 மாதம் தங்கி பயிற்சி எடுத்து வருகின்றனர்.

தற்சமயம் தென்னை விவசாயிகளை ஒருங்கிணைந்த தென்னை மர உற்பத்தியாளர்கள் குழு ஏற்படுத்தி வருகிறார். இவருடைய பண்ணை நிர்வாகத்தையும் இயற்கைமுறை பண்ணை பராமரிப்பில் மகசூல் கூட்டியதையும் பார்த்து இவருக்கு தென்னை வளர்ச்சி வாரியம், அந்தமான் மாநில வேளாண்மைத்துறை போன்றன பரிசு கொடுத்து கௌரவப் படுத்தப்படுத்தியுள்ளனர்.

செல்லம்மாள், ரெங்கச்சா, தெற்கு அந்தமான்
செல் : 9531808927

ராம்சிங்கின் மாட்டுப்பண்ணை

ஹரியானா மாநிலத்தில் கர்னால் மாவட்டம் தரோரி கிராமத்தில் திரு. ராம்சிங் 1988ல் மாட்டுப் பண்ணை ஆரம்பித்தார். தற்சமயம் இந்த பண்ணையை இவரது மகன்கள் பராமரித்து வருகின்றனர். இப்பண்ணையில் சுமார் 200 சாஹிவால் என்ற நாட்டு இன பசுக்கள் பராமரிக்கப்படுகின்றன. இங்கு 20 ஏக்கரில் பசுந்தீவனம் புல் (நேப்பியர்) வளர்க்கப்படுகிறது. இப்பண்ணையில் நித்தமும் 500 லிட்டர் பால் கிடைக்கிறது. இதனை ஒரு லிட்டர் ரூ. 60 க்கு

விற்பனை செய்கிறார். வருடத்திற்கு ரூ. 8 லட்சம் வருமானம் வருகிறது. இருப்பினும் செலவுகளும் வருமானத்திற்கு ஏற்றாற்போல் உள்ளது. அதிக லாபம் இல்லை எனக் கூறுகிறார். இவர் பசுமாடுகள் மேய்ப்பதற்கு இடமில்லாததால் சுமார் ஒரு ஏக்கரில் சில மணி நேரங்கள் உலாவி வர, நீர் குடிக்க தன்னிச்சையாக விடுகிறார். இவரிடம் காளையும் உள்ளதால் தானாக இனப்பெருக்கம் நடந்து விடும். கன்று வளர்ந்து 2–2 1/2 வருடங்களில் முதன் முறையாக இனப்பெருக்க பருவம் வந்தவுடன் ஊசி மூலம் செயற்கை கருவூட்டம் செய்யப்படுகிறது. பின்னர் அடுத்த பருவத்திலிருந்து காளை விழுந்து இனப்பெருக்கம் நடந்து விடும். நன்கு பராமரிப்பு நடைபெறுவதால் நோய் தாக்குதல் மிகக்குறைவு. பால் கறந்த பின் காம்புகளை கடுகு எண்ணெயில் துடைத்து விடுகிறார். இதனால் மடி நோய்க்கிருமிகள் பாதிப்பு இருக்காது. இவர் பின்பற்றும் கால்நடை தீவனம் தயாரிப்பு முறை பின்வருமாறு:

100 கிலோ தயாரிக்கத் தேவையான பொருட்கள் :

கோதுமை தவிடு 30 கிலோ, தானியத்தூள் 30 கிலோ, கடலைப்பிண்ணாக்கு 30 கிலோ, வெல்லம் (கழிவு வெல்லப்பாகு) 6 கிலோ, சாதாரண உப்பு 2 கிலோ, தாதுப்பு கலவை 2 கிலோ. இதனை பால் மாட்டிற்கு 5 கிலோவும், சினை மாட்டிற்கு 2 கிலோவும் கொடுக்கிறார். இதனை காலை, மாலை இரு வேளை கொடுக்கிறார். இவர் தயார் செய்யும் தீவனத்திற்கு செலவு ரூ. 25 (ஒரு கிலோவுக்கு) ஆகிறது.

இந்தப் பண்ணையில் 8.9.2022 அன்று கால்நடை பணியாளர்களுக்கு கால்நடை மூலிகைவைத்ய தயாரிப்புகள் செய்து காண்பிக்கப்பட்டது.

Ramsingh, Taroari, Karnal District , Haryana
Cell : 9416368234, 9813807052

இயற்கையில் விளைந்த பண்டங்களே நோய் தீர்க்கும் உணவு

திரு. ரஞ்சித்குமார் எம்.எஸ்.ஸி., (யோகா நேச்சுரோபதி)படித்துள்ளார். இவருக்கு வயது 41. இவர் மதுரை மாவட்டம், மேலூர் கிழக்கு ஊராட்சி ஒன்றியம் ஆமூரைச் சேர்ந்தவர். இவர் கடந்த 12 வருடங்களாக இயற்கையாக விளைந்த பழங்கள் மற்றும் காய்கறிகளைக் கொண்டு பல நோயாளிகளுக்கு எவ்வித அலோபதி மருந்து, மாத்திரைகள் இன்றி இயற்கை வைத்யம் செய்து வருகிறார்.

சுமார் 7 1/2 ஏக்கர் சொந்த நிலத்தில் மா, கொய்யா, நெல்லி மற்றும் சில காய்கறிகளை சாகுபடி செய்து அதில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு பல நோயாளிகளை இயற்கை முறையில் குணப்படுத்தி வருகிறார். கடந்த 12 வருடங்களாக சுமார் 10,000 பேருக்கு வைத்யம் செய்து குணப்படுத்தியுள்ளர். இவரின் மனைவி மற்றும் இரு பிள்ளைகள் இதற்கு உறுதுணையாக உள்ளனர். காலை, மதியம், இரவு என மூன்று வேளைகளிலும் இயற்கை மருத்துவ முறையில் காய்கறிகள், பழவகைகள் மற்றும் மூலிகைகளைக் கொண்டே வைத்யம் செய்து வருகிறார். இவர் கடைபிடிக்கும் மருத்துவ முறைகள் பின்வருமாறு:

1) காலையில் வெண்பூசணியுடன் ஆவாரம்பூவை அரைத்து சாறு எடுத்து வெறும் வயிற்றில் குடிக்கக் கொடுக்க வேண்டும்.

2) நெல்லிக்காயுடன் இஞ்சியை இடித்து சாறு எடுத்து அதனுடன் கறிவேப்பிலை மற்றும் புதினா இலைச் சாற்றையும் கலந்து, வாதம், பித்தம், கபம் நீங்கக் கொடுத்து வருகிறார்.

3) இராஜ உறுப்புகள் நன்றாகச் செயல்பட வள்ளலார் அருளிய முறையான, கரிசலாங்கண்ணி இலைச்சாறைக் கல்லீரல் நோய் நீங்க மருந்தாகக் கொடுக்கிறார்.

4) மூக்கரட்டை கரைசல் கிட்னி மருந்தாகவும், தாமரைப்பூ மற்றும் இலைச்சாறை இதயத்திற்கும் முசுமுசுக்கைச்சாற்றை நுரையீரலுக்கு மருந்தாகவும் கொடுக்கிறார்.

5) அருகம்புல்சாறு மற்றும் அரச இலைச்சாறு போன்றவற்றை இரத்தம் சுத்தம் செய்யப்பயன்படுத்தி வருகிறார்.

5) ஒருவருடைய உடல் எடையைப் பொறுத்து உடல் எடையில் சுமார் 10–ல் ஒரு பங்கு எடை உணவு அல்லது பழவகைகள், சாலட் போன்றவற்றை உணவாகக் கொடுத்து வருகிறார்.

6) மேலும் ஆவரம் இலைச்சாறு, செம்பருத்திச்சாறு, நெல்லிச்சாறு, முளைகட்டிய நிலக்கடலை, பாசிப்பயறுடன் தேங்காய்பால் மற்றும் பழங்களை சிறு சிறு துண்டுகளாக வெட்டி உண்ணத் தருகிறார்.

7) சிறு தானியங்களான வேக வைத்த வரகு, சாமை, தினை, கேழ்வரகு கஞ்சியைக் கொடுத்து வருகிறார்.

8) வாழைப்பூவுடன் முருங்கைக்கீரையை கலந்து வேக வைத்து முருங்கை சூப் தயாரித்தும் நோயாளிகளுக்கு உணவாகத் தருகிறார்.

9) இரவு உணவாக முதலில் பழவகைகள் சிறுசிறு துண்டாக்கி உண்ணத் தருகிறார்.

10) பழவகைகளை உண்ணக் கொடுத்த பின்னர் அவலுடன் கருப்பட்டியைக் கலந்து ஒரு உணவாகவும், அவலுடன் எலுமிச்சை பழச்சாறு மற்றும் நிலக்கடலையைக் கலந்து மற்றுமொரு உணவாகவும் கொடுக்கிறார்.

தேங்காய் மோர் தயாரித்தல்:

தேங்காய்பாலுடன் எலுமிச்சை பழச்சாறு கலந்து சுமார் 2 மணி நேரம் வைத்தால் தயிராகி விடும்.

இயற்கை வைத்தியத்திற்கு உதவும் பழமொழிகள்:

கணிகள் உண்டால் பிணிகள் இல்லை. தேங்காய்பால் உண்பது தாய்ப்பாலுக்கு நிகர். கம்புப்பால் தெம்பு உண்டாகும். வாழைப்பழம் உண்டால் வாழ வைக்கும். தொந்தி நோய்க்குத் தந்தி. வாய்வழி மூச்சு மரணத்திற்கு எச்சரிக்கை. மைதா உண்டால் மந்தம் உண்டாகும்.

திரு. ரஞ்சித்குமார், 2/76 ஆமூர், தெற்கு ஆமூர் போஸ்ட், மேலூர் தாலுகா. பின் கோடு – 625110
செல் : 9443095594, 8610410069

பழங்கள் மற்றும் பந்தல் காய்கறிகளை பறிக்க பழம்பறிப்பான்

சிறு குறு விவசாயிகள் தாங்கள் விளைவித்த பழங்கள் மற்றும் காய்கறிகளை அறுவடை செய்யும் போது 10–15 சதவிகிதம் சேதார இழப்பு ஏற்படுகிறது. ஆகையால் விவசாயிகளின் பளுவைக்குறைத்து சேதார இழப்பை தடுத்து எளிய முறையில் பழங்களைப் பறிக்க பழம்பறிப்பான் பயன்படுகிறது.

குறிப்பாக மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, சீத்தாப்பழம் மற்றும் பந்தல் காய்கறிகளான பாகல், புடலை போன்ற காய்கறிகளை பறிப்பதற்க்கும் பயன்படுகிறது. பழப்பறிப்பானை மூங்கில் கம்புகளுடன் (மரத்தின் உயரத்திக்கேற்றாற் போல்) பொருத்தப்பட வேண்டும்.

பழம்பறிப்பானின் சிறப்பம்சங்களாவது

எடை குறைவு. அனைத்து வயதினரும் எளிதில் பயன்படுத்தக் கூடியது. பழம்பறிப்பானில் இரண்டு சிறிய கூர்மையான கத்தி இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் பழங்களை சேகரிப்பதற்க்கு நைலான் வலை பொருத்தப்பட்டுள்ளதால் சேதாரமில்லாமல் எளிதில் பழங்களை பறிக்கப்பயன்படுகிறது. 5,000 பழங்கள் பறித்தவுடன் கத்தியை மாற்றிக் கொள்ளலாம். குறைந்த நேரத்தில் அதிக பழங்கள் பறிக்க பயன்படுகிறது. மேலும் வேலையாட்களின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. பழப்பறிப்பான் குறிப்பாக குறு சிறு விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாகிறது.

ரம்யா, வேளாண் அறிவியல் மையம், காமாட்சிபுரம், தேனி மாவட்டம். செல் : 9578884432

சக்திவேலின் சத்துணவு மாவு தயாரிப்பு

சக்திவேல் (வயது 61) எம்.எஸ்.ஸி., வேதியியல் படித்துவிட்டு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். பின்னர் தனியாக சத்துணவு மாவு தயாரித்து தனி நிறுவனமாக நடத்தி வருகிறார். இவர் பல தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள் போன்றவற்றை முளைக்கட்டி காயவைத்து அரைத்து சத்துமாவு தயார் செய்து விற்பனை செய்து வருகிறார். இதனை கஞ்சியாக காய்ச்சி குடிக்கலாம் அல்லது பாலில், சுடுநீரில் கலந்து தேவையான அளவு இனிப்பு சேர்த்து அருந்தலாம். இதனால் ஆரோக்கியம் கூடும். சர்க்கரைச்சத்து கட்டுப்படும். புற்றுநோய் போன்ற நோயுள்ளவர்களுக்கும் நிவாரணமாக இது நல்ல முன்னேற்றத்தைத் தருகிறது. இதில் புரதச்சத்து 24 சதவீதம் வரை உள்ளது. செரிமானத்தை கூட்டும். இதில் நார்ச்சத்துப்பொருளும் உண்டு. இதில் கிளைசின் அளவு குறைவு (Low glycinic index). இதில் 30 வகையான பொருட்கள் அடங்கியுள்ளன. இதில் முந்திரி, சுக்கு, பாதாம், ஏலக்காய் போன்றவையும் சேர்க்கப்பட்டுள்ளன.

முளைகட்டிய உளுந்து, வயதிற்கு வந்த பெண்களுக்கு நல்ல ஆரோக்கியத்தை கொடுக்கும். இது தசையை வலுப்படுத்தும். கொள்ளு சளியை வெளியேற்றும். வெந்தயம் சர்க்கரை சத்துக்கு உகந்தது. முளைகட்டிய சத்துணவு மூட்டுவலிக்கு நிவாரணம் கொடுக்கும் என இதை பயன்படுத்தியவர்களின் அனுபவங்களாக கூறுகிறார். இந்த சத்துணவு மாவை 400 கிராம் பாக்கெட்டை ரூ. 175க்கு கொடுக்கிறார். இதில் அடங்கியுள்ள பொருட்கள் பின்வருமாறு:

முளைகட்டிய கைக்குத்தல் அரிசி, சிவப்பு அரிசி, கோதுமை, சம்பா கோதுமை, பார்லி, சோளம், மக்காச்சோளம், வெள்ளை, கருப்பு, மூக்குக்கடலை, முளைகட்டிய மொச்சை, துவரை, பச்சைப்பயறு, கருப்பு உளுந்து, காராமணி, பச்சைப்பட்டாணி, வேர்க்கடலை, ராஜ்மா, சோயா பீன்ஸ், சூரியகாந்தி, முளைகட்டிய வரகு, தினை, சாமை, குதிரைவாலி, ராகி, கீன்வா கீரைவிதை, முளைகட்டிய வெந்தயம், பனங்கிழங்கு.

ஏ. சக்திவேல், 3/256, திரவியநாதபுரம்,
ரோசல்பட்டி. விருதுநகர் – 626001
செல் : 9940288016, 8012512527

இயற்கை வேளாண்மைத் தயாரிப்புகள் – செல்லமுத்துவின் அனுபவங்கள்

என்னுடைய மூலிகைப்பூச்சி கொல்லி மருந்து தயாரிப்பு ஆன்லைனில் யூடியூப்பில் உள்ளது. இதைப்பார்த்து விட்டு எனக்கு அன்றாடம் சில தொலைபேசி அழைப்புகள் வந்த வண்ணம் உள்ளன. அழைப்பில் கேட்கப்படும் கேள்விகளுக்கு முடிந்தளவு பதில் கூறி வருகிறேன். கோபிச்செட்டிப் பாளையத்திலிருந்து வந்த அழைப்பில் மல்லிகைப் பூவிற்கு மூலிகைப்பூச்சி விரட்டி மற்றும் பஞ்சகவ்யா தெளித்தும் பச்சைநிறம் காணப்படாமலிருந்தது. இதற்கு நான் கூறியபடி 9 லிட்டர் நீரில் 1 லிட்டர் பசு மாட்டு கோமியம் தெளிக்கச் சொன்னேன். இதன்படி மல்லிகைச்செடி பசுமையை அடைந்ததாகக் கூறினார். ஆனால் கோமியக் கரைசலை ஒரு தடவைக்கு மேல் பயிருக்கு தெளிக்கக்கூடாது. மீன் அமிலக் கரைசல் நல்ல பலனைத் தருவதால் இதை பல முறை பயிருக்குத் தெளிக்கப் பயிருக்கு தழைச்சத்து கூடுகிறது. இதனால் சரியாக பூ, காய் எடுப்பதில்லை. இதை ஒன்று அல்லது இரண்டு தடவை மட்டும் பூபூப்பதற்கு முன் வளர்ச்சி பருவத்தில் தெளிக்க வேண்டும். அதே சமயம் மூலிகை பூச்சி விரட்டி, பஞ்சகவ்யா மாறி மாறித் தெளிக்கலாம். எனவே மீன் அமிலக்கரைசலை அளவுடன் தெளித்து பிற தயாரிப்புகளான மூலிகைபூச்சி விரட்டி, பஞ்சகவ்யாவை உடன் சேர்த்து மாறி மாறி பயன்படுத்த வேண்டும். தனியாக மீன் அமினோ அமிலத்தை மட்டும் சிலர் தயாரித்து பயிருக்கு தெளித்து வருவதால் பயிர் பூக்காது. நெல்வயலில் வரப்பில் புல்லுக்கு ரவுன்ட்ஆப் களைக் கொல்லி தெளிப்பதற்கு பதிலாக தட்டைப்பயறு வரப்பில்

பயிரிட்டால் களைக்கட்டுப்படும். சிலர் நரிப்பயிரை வரப்பில் சாகுபடி செய்கின்றனர். இதனால் நரிப்பயிர் பயிரின் மீது படர்ந்து பயிர் வளர்ச்சி குன்றிவிடும். மக்காச்சோளம் விதைத்து பயிர் முளைத்த ஒரு வாரத்தில் நாற்றுக்களை முயல் வெட்டும். இதற்கு மீன் அமினோ அமிலம் ஒரு முறை மட்டும் தெளிக்க முயல் வெட்டு நின்றுவிடும். பெருங்காயக்கரைசலை பயன்படுத்தினால் வேர்ப்புழு, நூற்புழுக்கள் தொல்லை குறைந்துவிடும். பெருங்காயம் 700 கிராம் அளவு எடுத்து சாக்கில் வைத்து நீர் பாயும் வாமடையில் வைத்து விட வேண்டும். இது ஓர் ஏக்கர் நிலத்திற்கு போதுமானது.

தென்னையில் வரும் காண்டாமிருக வண்டிற்கு பூச்சிவிரட்டி கரைசல் 1/2 லிட்டரை 2 லிட்டர் நீரில் கலந்து குருத்தில் 2 மாதங்களுக்கு ஒரு முறை ஊற்ற வேண்டும். தென்னையில் காய்ப்பைக் கூட்ட ஜீவாமிருதக் கரைசல் மரத்திற்கு ஒரு லிட்டர் ஒவ்வொரு மாதமும் விட வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை குப்பை 2 கூடை மரத்தைச் சுற்றி இட வேண்டும். இதனால் தேங்காய் எடை சுமார் 200 கிராம் கூடும். இது நான் அனுபவத்தில் கண்ட உண்மை. மீன் அமினோ அமிலம் எக்காரணத்தைக் கொண்டும் மண்ணில் தெளிக்காமல் பயிரின் மேல் மட்டும் படுமாறு தெளிக்க வேண்டும்.

நான் முன்பு பஞ்சகவ்யா, மூலிகை பூச்சி விரட்டி ஒவ்வொன்றும் லிட்டர் ரூ. 150க்கு கொடுத்து வந்தேன். சில விவசாயிகள் இதை தாங்களாகவே தயாரிக்கும் சமயம் ரூ. 150க்கு அதிகமாக செலவாகிறது என என்னிடம் தெரிவிக்கின்றனர். கூலியாட்களினால் இயற்கை தயாரிப்புகள் தயாரிப்பதில் செலவு அதிகமாகிறது. எனவே திரும்ப என்னிடமே வந்து கரைசலை விலைக்கு வாங்கி செல்கின்றனர். முன்பு நானே பசுமாடு வளர்த்து இயற்கை வேளாண்மை தயாரிப்புகளை தயாரித்து வந்தேன். தற்சமயம் மாடு பராமரிக்க முடியவில்லை. குடும்பத்தில் பிள்ளைகளை கட்டிக்கொடுத்து விட்டோம். இதனால் சாணம், கோமியத்தை விலைக்கு வாங்கிக் கொள்கிறேன். எங்கள் ஊருக்கருகிலுள்ள கோசாலையில் நாட்டு மாடுகள் பராமரித்து வருகின்றனர். இந்த கோசாலையில் பால் கறக்கும் பசுவின் கோமியம் (அன்றாட பேய்ந்தது) லிட்டர் ரூ.22 க்கு கொடுத்து வாங்கிக் கொள்கிறேன். சாதாரண எல்லா மாடுகளும் (கன்றுகுட்டிகள் உட்பட) கலந்த கோமியம் ரூ. 12க்குத் தருகின்றனர். சாணம் கிலோ ரூ. 4 க்கு வாங்கிக் கொள்கிறேன். ஜீவாமிருதம் தயாரித்து ஒரு லிட்டர் ரூ. 20க்கு கொடுத்து வருகிறேன். மீன் அமினோ அமிலம் தயார் செய்ய பெரும்பாலானோர் கழிவு மீன் பயன்படுத்துகின்றனர். சுத்தமான முழு மீன் பயன்படுத்த அதன் வீரியம் மற்றும் அளவும் அதிகமாகக் கிடைக்கும். இதனை 10 லிட்டர் நீருக்கு 100 மி.லி. என்ற அளவில் பயன்படுத்தலாம். இதனை லிட்டருக்கு ரூ. 280/– க்கு கொடுத்து வருகிறேன்.

செல்லமுத்து, கருக்கம்பாளையம், ஊஞ்சலூர் வழி,
கொடுமுடி தாலுகா, ஈரோடு மாவட்டம்,
செல் : 9486602389

கைத்தறியில் எலட்ரானிக் ஜக்காடுமிஷின் மற்றும் ஜக்காடு தூக்கும் மிஷின்

தெலுங்கானா மாநிலத்தில் ஹைதராபாத்தில் வசித்து வரும் திரு. சிவக்குமாருக்கு வயது 42 ஆகிறது. இவர் பி.எஸ்சி படித்து விட்டு கைத்தறி நெசவில் புதுமைகள் படைத்துள்ளார். இவர் உருவாக்கிய மிஷின்கள் மூலம் நெசவாளர்களுக்கு நெசவில் வேலைப் பளுவைக் குறைத்து வருமானத்தைக் கூட்ட உதவுகிறது.

நெசவில் நெய்யும் சேலையில் டிசைன் போடுவதற்கு பஞ்ச்கார்டு உதவியுடன் பயன்படும் ஜக்காடு நடைமுறையில் உள்ளது. இந்த பஞ்ச்கார்டு மூன்று வருடங்கள் தான் இருக்கும். அதன்பின் மாற்ற

வேண்டும். புதுடிசைன் வேண்டும் என்றால் பஞ்ச் கார்டு மாற்றப்பட வேண்டும். இவர் கண்டுபிடித்த எலட்ரானிக் ஜக்காட்டில் டிசைன் உருவாக்க சில நிமிடங்கள் போதுமானது. இதற்கு முன்பு பதினைந்து நாட்களில் ஒரு மாதம் வரை அவகாசம் தேவைப்படும். ஒரு பஞ்சுகார்டுக்கு ரூ. 7 லிருந்து 9 ரூ வரை செலவாகும். ஒரு டிசைன் போடுவதற்கு ரூ. 2000 லிருந்து ரூ. 3000 பஞ்ச்கார்டுகள் தேவைப்படும். மொத்தம் பஞ்ச்கார்டுகள் மூலம் டிசைன் போடுவதற்கு ரூ. 2000 மூதலீடு செய்ய வேண்டும். ஆனால் இவருடைய எலட்ரானிக் ஜக்காடில் ஒரு பென்டிரைவ் மட்டும் சொறுகிவிட்டால் போதுமானது. இதனால் செலவு சுத்தமாகக் கிடையாது. இதனால் அதிகமான சேலைகளைக் குறைந்த நேரத்தில் எளிதாக உருவாக்க முடியும். எலட்ரானிக் ஜக்காடு விலை ரூ. 65,000 ஆகும்.

ஜக்காடு தூக்கும் மிஷின்

இந்த ஜக்காடு மிஷின் 3 ஹெச்பி மோட்டாரில் இயங்குகிறது. இதில் மூன்று லிவர் உள்ளது. இதனை கால் வைத்து லேசாக மிதித்தால் ஜக்காடு இயங்கும். இந்த ஜக்காடு தூக்கும் மிஷின் ரூ. 12,000லிருந்து 20,000 வரை உள்ளது. இது வரை இவர் 20 மிஷின்கள் நெசவாளர்களுக்கு விநியோகித்துள்ளார்.

இவர் ஆரம்பக் காலத்தில் 2004ல் ஒரு கிராமத்திற்கு சென்றிருந்த பொழுது அந்த வீட்டில் தறி ஓடும் சத்தத்தை கேள்விப்பட்டு தறியை ஆர்வமாக பார்த்துள்ளார். அப்பொழுது ஜக்காடு மூலம் டிசைன் போடும் முறையை உன்னிப்பாக பார்த்து அதனை மேம்படுத்த முயற்சித்துள்ளார். 2016ல் இதன் முழு வடிவமைப்பையே ஏற்படுத்தி அதற்கு காப்புரிமை பெற்றுள்ளார். தற்பொழுது அஹமதாபாத்திலுள்ள கியான் என்ற அமைப்புடன் சேர்ந்து முழு வடிவமைப்பை முடித்துள்ளார்.

Sivakumar Modha, H.No. 5-9 -26/C
Raji Gandhi Nagar, Prashanthi Nagar
1E (Exten) Kukatpally, Hyderabed - 500072
Telengana India. Cell : 8143824009

சமையல் எரிவாயு சிலிண்டரை நகர்த்தி செல்லும் கருவி

காஷ்மீர் மாநிலத்தில் அனந்தநாக் மாவட்டத்தில் கிரேரி என்ற கிராமத்தில் திரு. முஸ்டாக் (39 வயது) 10வது வகுப்பு வரை படித்துவிட்டு விவசாயம் செய்து வருகிறார்.

இவர் ஏற்கனவே வால்நட் கொட்டையை உடைத்து பருப்பை பிரிக்கும் கருவியை வடிவமைத்துள்ளார். தற்பொழுது சமையல் எரிவாயு சிலிண்டரை எளிதாக நகர்த்தி செல்லுவதற்கு கையால் இழுத்துச் செல்லும் கருவியை வடிவமைத்துள்ளார். சமையல் எரிவாயு சிலிண்டரை அடிக்கடி சுமந்து செல்லும் வேலையாட்களுக்கு கழுத்து, புஜம் வலி ஏற்பாடுகிறது. பெண்களும் இதை உருட்டி செல்லும் சமயம் மிகவும் அவதிப்படுகின்றனர். இதற்கு தீர்வாக திரு. முஸ்டாக் ஓர் எளிமையான இரு சக்கரங்கள் கொண்ட இரும்பினால் ஆன இழுத்துச் செல்லும் அமைப்பை உருவாக்கியுள்ளார். இதனால் சிலிண்டரை தூக்கி செல்லும் வேளைப்பளு குறையும். இதனை சிறு குழந்தைகளும் எளிதில் நகர்த்தி செல்லலாம். இதனுடைய விலை ரூ. 500 மட்டும் இது வரை 700 கருவிகளை விநியோகித்துள்ளார்.

பாரம்பரியமாக மலையில் கிடைமாடுகள் மேய்ப்போருக்கு மேய்ச்சல் அனுமதி பெற செய்ய வேண்டியது

வனஉரிமைச்சட்டம் 2006ன் படி 3 தலைமுறைகளுக்குக் குறையாமல் மலையில் கால்நடை மேய்த்து வரும் கிடைக்காரர்களுக்கு மேய்ச்சல் அனுமதி கொடுக்கப்பட வேண்டும். தற்பொழுது மேய்ச்சல் அனுமதி இல்லாமல் அல்லல்படுகின்றனர். இதற்கு கிராமசபைக் கூட்டத்தில் தீர்மானம் இயற்றப்பட வேண்டும். பாரம்பரியமாக கிடைவைத்து மேய்த்து வருகின்றவர்களின் பெயர், முகவரி, மாடு எண்ணிக்கை விபரத்துடன் மலையில் மேய்க்கும் அனுமதி தர தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். பின்னர் முறைப்படி மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

Mushtaq, Kireri, Anantnag District, J & Kashmir. Cell : 9149958426

சுற்றுச்சூழல் சார்ந்த ஏல விவசாயம் – விவசாயி கையேடு – புத்தகத்தின் சுருக்கம்

இரண்டு நூற்றாண்டு காலமாக தென் இந்தியாவின் மேற்குத்தொடர்ச்சி மலைகளில் 600–1200 மீட்டர் கடல் மட்ட உயர அளவில், பலவகை மர நிழலின் கீழ் ஏலக்காய் பயிரிடப்படுகிறது. ஏலச்செடிதரும் காயின் மகத்துவம் கருதி பாரம்பரிய முறைகளில் விவசாயம் செய்து வந்ததால் மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரின் சுற்றுச் சூழல் பாதுகாக்கப்பட்டது.

ஏல விவசாயத்தில் லாபமான வருமானம் எடுக்க ஓரளவு ரசாயன உரங்கள் மற்றும் பூச்சி பூஞ்சாண நாசினிகளை உபயோகப்படுத்துவது அவசிய மெனினும், தேவைக்கு அதிகமாக இவைகளை இடுவது பல நேரங்களில் பயிர் இழப்பை ஏற்படுத்துகிறது. இரசாயன உரங்கள் மற்றும் பூச்சி பூஞ்சாண கொல்லிகளின் பயன்பாட்டைத் குறைப்பது அல்லது தவிர்ப்பதே சுற்றுச்சூழல் சார்ந்த ஏல விவசாயத்தின் முக்கிய அங்கமாகும்.

முன்னுரை மற்றும் அறிமுகம் பகுதியில் புத்தகம் எழுதிய குறிக்கோள் விவரிக்கப்பட்டுள்ளது. ஏல விவசாயத்தின் சுருக்கமான வரலாறு ஏலச்செடிகளை அறிந்து கொள்வோம் என்ற பகுதிகள் இளைய / புதிய ஏல விவசாயத்திற்குத் தேவையானவை. நிழல் நிர்வாகம், மண்வளம் பேணுதல், தேனீக்கள், மூலம் மகரந்தச்சேர்க்கை, பூச்சி மற்றும் நோய் நிர்வாகம் என்பன விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன.

சுற்றுச் சூழல் ஏல விவசாயத்தில் மண் வளத்தை மேம்படுத்தி அவசியமான இடுபொருட்களை மட்டும் உபயோகப்படுத்தி சுற்றுச்சூழலை காப்பதன் மூலம் பூச்சி பூஞ்சாண நோய்களை இயற்கையாகவே கட்டுப்படுத்தும்காரணிகளை தோட்டத்தில் நிலைநிறுத்தி, வேலையாட்கள் பற்றாக்குறையான காலத்தில் வேலையாட்கள் தேவையைக் குறைப்பது, விவசாயிகளின் வேலைப்பளுவை குறைப்பது ஆகிய யுக்திகளை விவசாய நண்பர்கள் தன்னகப்படுத்தி மேற்குமலைத்தொடரின் இயற்கை வளங்களை பாதுகாத்து, இரசாயன பூச்சிக்கொல்லிகளின் எச்சம் இல்லாத ஏலக்காயை அதிக லாபமாக உற்பத்தி செய்ய முடியும் என்பன போன்ற தகவல்கள் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

புத்தகத்தின் முக்கிய பகுதியில் (பகுதி 1–6) சுற்றுச் சூழல் விவசாய முறையில் வனப்பகுதியை சீர் செய்து ஏல நாற்றுப்பண்ணை அமைப்பது, ஏலப்பயிர் நடுவது, தோட்டப் பாராமரிப்பு பயிர், பாதுகாப்பு, ஏலக்காய் அறுவடை, உலர்த்துதல், பாதுகாத்தல் போன்ற வழிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. புத்தகத்தின் 16 இணைப்பு பகுதிகளில் (பகுதி 7, 1–16) மண்வள பாதுகாப்பு மேன்பாடு, மண் மாதிரி எடுத்து மண் பரிசோதனைக்கு கொடுத்தல் ஏலத்தில் தோன்றும் பூச்சிகளைக் கண்டறியும் அறிகுறிகள், ஒருங்கிணைந்த பூச்சிநோய் நிர்வாகம், உயிரியல் முறை, பூச்சிநோய் கட்டுப்பாடு சுற்றுச் சூழல் சார்ந்த ஏல விவசாயம், ஏலச்செடியில் மஞ்சப்பிஞ்சு, மலர் காய் உதிர்தல், போர்டோ மிக்சர் தயாரிப்பு ஏலத்தோட்டத்திற்கு தேவையான நிழல் மரங்கள், பெரிய ஏலக்காய், ஒரு சிறிய குறிப்பு, விவசாயிகளுக்கு தேவையான ஏலத்தோட்டங்களைப் பற்றிய வண்ணப்படங்கள் ஆகியன காணலாம். ஏலத்தோட்ட விவசாயத்தில் எழும் சந்தேகங்கள் அதற்கான விளக்கங்களும் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளதகவல்களுக்கான ஆதாரங்களும் 160க்கு மேற்பட்ட வண்ணப்படங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஏல விவசாயத்தில் சுற்றுச்சூழல் சார்ந்த தற்சார்பு கொண்ட விவசாய முறைகளை விவசாயிகள் அறிந்து தங்களது சுயதிறனை மேம்படுத்தி தேவையற்ற செலவுகளைக் குறைத்து அறுவடை தவிர்த்துள்ள வேலைகளுக்கு அதிகப்படியான வேலையாட்களின் உதவியில்லாமல், அதிகமான ஏலக்காயை உற்பத்தி செய்ய முடியும் என்பதே இந்த புத்தகத்தில் அடங்கியுள்ள தகவல்கள். இந்த புத்தகத்தை வாங்குவதற்கு கீழ்கண்ட இணைப்பை அணுகலாம்.

https://a.co/d/dkrjGS

–வரதராசன், ஏலக்காய் வாரியம் பூச்சியியல் துறை தலைவர் (ஓய்வு), 1–1–26 சொக்கலிங்கநகர் 1வது தெரு, கூடல்நகர், மதுரை – 625018
செல்: 9446137237 & 8838389603

மன்சுக்பாயின் மண்பானைத் தொழில்

குஜராத் மாநிலம், ராஜ்காட் மாவட்டம், மொர்பியில் திரு. மன்சுக்பாய் (வயது 56) 10வது வரை படித்து விட்டு மண்பானைத் தொழில் ஈடுபட்டுள்ளார். தனது குடும்ப பாரம்பரியத் தொழிலான குயவர் தொழிலை விட்டு சில காலம் டீ கடை நடத்தி வந்தார். பின்னர் வீட்டுக்கு கூரைக்கு ஓடு தயாரிக்கும் நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தார். இவர் 1983ல் இந்த தொழில் மாத ஊதியமாக ரூ. 300/– பெற்று குடும்பத்தை நடத்தி வந்தார். பின் மண்ணிலான சட்டியின் மூலம் தோசை, சப்பாத்தி கல் தயார் செய்ய முயன்றார்.

தோசைக்கல் தயாரிக்கும் மிஷின்

இந்த சமயத்தில் மிட்டி கூல் (மண் குளிர்ச்சி) என்ற தொழில் நிறுவனத்தை நிறுவத் தயாரானார். தோசைக்கல் தயாரிக்க ஓர் இயந்திரத்தை வடிவமைத்து தயாரிக்கலானார். குறைந்த நேரத்தில் அதிக சப்பாத்தி தயாரிக்க முடிவதால் இதற்கான தேவை அதிகரித்தது பின்னர் இவருடைய மண்ணிலான பிற தயாரிப்புகளை அதாவது பிரிட்ஜ், வாட்டர் பாட்டில், அழகு சாதனப் பொருட்கள், விளக்கு போன்றவற்றை வெளிக்கொணர்ந்தார். இந்த பொருட்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. இதன் மூலம் பல பரிசுகளை பல்வேறு நிறுவனங்களிட மிருந்து பெற்றார்.

குஜராத், கட்ச் பகுதியில் ஜனவரி 2001ல் பூகம்பம் நடந்தது. அப்போது இவரிடம் ஸ்டாக்கில் இருந்த மண் சாமான் பொருட்கள் உடைந்து நொறுங்கி விட்டன. மீதியுள்ள சாமான்களை பூகம்பத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கினார். சந்தேஷ் குஜராத் நாளிதழில் இவரது உடைந்த வாட்டர் பில்டர் போட்டா பூகம்பத்தில் நொறுங்கியதை "ஏழையின் உடைந்த குளிர்சாதனம்" என்ற தலைப்பில் வெளியிட்டிருந்தனர்.

இதைப்பார்த்த மான்சுக்பாய்க்கு மின்சார உதவியில்லாமல் மண்பாண்ட குளிர்சாதனப் பெட்டியை வடிவமைக்கும் எண்ணம் உருவாகியது. இந்தச்சமயத்தில் கியான் (GIAN) என்ற அமைப்பின் தொடர்பு கிடைத்தது. பின்னர் 2005ல் மண்பெட்டி பிரிட்ஜை உருவாக்கினார். ஒரு சிவில் இன்ஜினியர் இதைப்பார்த்து 100 எண்ணிக்கை ஆர்டர் கொடுத்து ரூ. 2 லட்சம் முன்பணம் கொடுத்தார்.

இவர் 2010 சைனாகிளே எனப்படும் நீர் நிரப்பும் ஜாடியை உருவாக்கினார். 2015ல் சாணியிலிருந்து எருவரத்தட்டி தயாரிக்கும் மிஷினை உருவாக்கினார். தற்சமயம் குளிர்ச்சியான மண்வீடு கட்டி ஓடு போட்டு முடிக்கும் மாதிரி வீட்டை உருவாக்குவதில் இறங்கியுள்ளார்.

இவருடைய மண்பாண்ட பொருட்களைப் பார்த்து இராஜ்காட், மொர்பி, சுரேந்தரநகர் பகுதி குயவர்கள், கூலியாட்களும் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இது சுமார் 1000 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கின்றது.

இவர் தன்னுடைய மண்பண்ட பொருட்களின் தேவை அதிகரிப்பைத் தொடர்ந்து 4 இடங்களில் தொழிற்சாலைகள் துவங்கியுள்ளார். இதில் 250 பெண்கள் ஊதியம் பெற்று வருகின்றனர். இந்த நிறுவனத்தில் படித்துக் கொண்டே சம்பாதிக்க மாணவர்களுக்கு மாதம் ரூ. 5000 சம்பாத்திக்கவும் படித்த பெண்கள் மாதம் ரூ. 15000 சம்பாதிக்கவும் அன்றாட வேலை செய்யும் கூலிப் பெண்களுக்கு ரூ. 300 கிடைக்கவும் வழி செய்துள்ளார்.

இவருடைய தொழிலில் புதிய கருவிகள் படைத்து மக்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கியதை பாராட்டி ஜமன்லால் பஜாஜ் (கிராமப்புற தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான விருது) 2022க்கான பரிசு 8–12–2022 அன்று மும்பையில் வழங்கப்பட்டது.

Mansukbhai Pirajapathi,
MITI COOL, R.K. Nagar, Panchasar Road
Wankaner - 363622, Rajkot, Gujarat,
Cell : 9712977249

சூரிய ஒளியில் இயங்கும் டிராக்டர்

உத்திரப்பிரதேச மாநிலத்தில் ராகுல் சிங் என்பவர் சோலார் டிராக்டர் உருவாக்கியுள்ளார். இந்த டிராக்டர் உதவி கொண்டு ஓர் ஏக்கர் நிலத்தை 3 மணி நேரத்தில் உழலாம். இதனால் டீசல், பெட்ரோல் போன்ற எரிபொருள்கள் தேவையில்லை. இது மணிக்கு 70 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும். இவர் 12 வது வகுப்பு படித்து கொண்டிருக்கும் போதே இந்த டிராக்டர் வடிவமைப்பை செய்து முடித்தார். இது கரும்பு சாகுபடிக்கு உகந்ததாக உள்ளது. இந்த டிராக்டரை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு கியான் என்ற அஹமதாபாத்தில் உள்ள நிறுவனம் இவருக்கு நிதி உதவி வழங்கியுள்ளது (5 சதவீதம் வட்டியில் கடன் ரூ. 5,00,000 வழங்கியுள்ளது இது வரை 20 டிராக்டர்கள் விற்றுள்ளார். இது 20 ஹெச்பி திறன் கொண்டது. இதன் விலை ரூ. 12,00,000.

Rahul Singh, Bijapur Asmanchapara, Post Siswa Bazar, Maharaj Ganj District, U.P, Cell : 9936788611

வாசகர் வட்டம்

இயற்கை வேளாண்மையில் பண்டமாற்று முறை

ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலுகா, வைத்யலிங்கபுரம் கிராமத்தில் எனக்கு 1 1/2 ஏக்கர் நிலமும் உள்ளது. இதில் இயற்கை வேளாண்மை 2005 லிருந்து செய்து வருகிறோம். எங்களிடம் 4 மாடுகள், கிடாரிகள் உட்பட 10 எண்ணம் உள்ளன. இதிலிருந்து கிடைக்கும் சாணத்தை இயற்கை வேளாண்மை தயாரிப்பு பயன்படுத்தி என்னுடைய நிலத்திற்கும் பிறருக்கும் கொடுத்து வருகிறேன். தற்சமயம் 2 விவசாயிகளுக்கு உரம் கொடுத்து அவர்கள் நிலத்திலிருந்து வைக்கோலை வாங்கி மாட்டிற்கு தீவனத்திற்கு பயன்படுத்தி வருகிறேன்.

ஓர் ஏக்கர் நெல்பயிரிடும் விவசாயிக்கு 200 கிலோ பச்சை சாணி தேவைப்படும். அடியுரமாக 150 கிலோ சாணம், மேலுரமாக கன ஜீவாமிருதம் தயார் செய்ய 100 கிலோ சாணம் தேவை. அதாவது ஒரு பாத்திரத்தில் 100 கிலோ சாணம் எடுத்து இத்துடன் வெல்லக்கரைசல் (2 கிலோவை 3 லிட்டர் கோமியம் கரைத்தது இத்துடன் 4 லிட்டர் கோமியம் சேர்த்து பிசைய வேண்டும். இது களி பதத்திலிருக்கும். இதனை 4வது நாளிலிருந்து விவசாயிக்கு கொடுக்கிறேன். இதை 10 கிலோ அளவில் எடுத்து வாய்க்கால் நீரில் கலந்து விடுவர். இதனை 5–6 முறை செய்வர். இதனால் விவசாயிகள் வேறு இரசாயன உரம் இடுவதில்லை.

பூச்சி நோய் வந்தால் அவர்களுக்கு கற்பூரக்கரைசல் 1 1/2 லிட்டர் கொடுத்து அடிக்க வைக்கிறோம். ஏக்கருக்கு 7 டாங்க் ஒரு டாங்கிற்கு 200 மி.லி கரைசல் சேர்க்கலாம். ஒரு டாங்க் 18 லிட்டர் கொள்ளவு நீர் கொண்டது. கற்பூரக் கரைசல் தயாரிக்க காதிசோப் 100 கிராம் எடுத்து வேப்பஎண்ணெய் 1/2 லிட்டரில் கரைத்து இத்துடன் கற்பூரக்கட்டி 10 கிராம், ஆர்.எஸ்.பதி யூக்கலிப்டஸ் தைலம் 100 மிலி. அல்லது சாராயம் குவாட்டர் பாட்டில் சேர்த்து 3 நாட்கள் வைத்து விட வேண்டும். 4வது நாளிலிருந்து தெளிக்க பயன்படுத்தலாம். இது தவிர மீன்அமிலம் ஒரு லிட்டர் ஓர் ஏக்கருக்குத் தெளிக்கலாம். முதலில் நட்ட 15 நாளில் ஒரு தடவை மீன் அமிலம் 20 நாள் இடைவெளியில் கொடுத்து வர வேண்டும். இத்துடன் பஞ்சகவ்யா ஏக்கருக்கு ஒரு லிட்டர் வீதம் (200 மி.லி. டாங்கில்) கலந்த தெளிக்கத் தருகிறேன்.

இந்த நடைமுறையை பயன்படுத்த 32 மூடை நெல் (70 கிலோ மூடை) மகசூல் கிடைக்கிறது. இதிலிருந்து 60 கட்டு வைக்கோல் கிடைக்கும். இதை ஈடாக எடுத்து மாடுகளுக்குத் தீவனமாக பயன்படுத்துகிறேன்.

தமிழ்மணி, வைத்தியலிங்கபுரம், ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டம்
செல் : 9245134568

கோமத்பவிரதமும் பலன்களும்

சதுர்மாஸ்ய விரதம் என்பது ஆடி பௌர்ணமியில் இருந்து கார்த்திகை பௌர்ணமி வரை இருக்கும் விரதமாகும். முதல் மாதத்தில் கீரை, இரண்டாவது மாதத்தில் தயிர், 3வது மாதத்தில் பால், 4வது மாதத்தில் உளுந்து உணவில் சேர்க்காமலிருக்க வேண்டும். இக்காலங்களில் வீட்டில் படத்தில் காட்டியவாறு கோலம் போடுவது ‘‘கோபத்ம விரதம்’’ என்று சொல்லப்படுகிறது. அதாவது மாடு தொழுவத்திலோ அல்லது பூஜை அறையிலோ பசுமாட்டுப்படம் கோலம் போட்டு கோலத்தில் 33 பூக்கள் உள்ளே அல்லது வெளியே இருக்குமாறு போட வேண்டும். எங்கள் வீட்டில் அன்று இந்தக் கோலம் போட்டிருந்தோம். அன்றைய தினம் வெள்ளிக்கிழமை கோலம் போட்டுவிட்டு விருதுநகரில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் என நினைத்து அங்கு சென்றோம். ஆனால் குறை தீர்க்கும் நாள் முதல் நாளே முடிந்து விட்டது எனக் கூறி விட்டனர். அதே சமயம் மாவட்ட ஆட்சியருடன் அன்று அமைச்சர் அவர்களுடன் ஒரு கூட்டம் நடைபெற்று கொண்டிருந்தது. நாங்கள் கிடைமாட்டுக் காரர்களுடன் மேய்ச்சல் பிரச்சனை காரணமாக 10 நபர்கள் வந்திருந்தோம். கூட்டத்தில் கலந்து கொள்ள எங்களுக்கு அழைப்பு இல்லையெனினும் அரங்கிற்குள் நுழைந்து விட்டோம். உள்ளே செல்லவும் அந்நியர்கள் போலிருந்த எங்களை அமைச்சரும் மாவட்ட ஆட்சியரும் அழைத்து என்ன விஷயமாக வந்துள்ளீர்கள் என கேட்டனர். நாங்களும் வனத்துறை மாடு மேய்ப்பதற்கு கெடுபிடி செய்து இடைஞ்சல் செய்வதாகச் சொன்னோம். மாவட்ட ஆட்சியர் இந்த பிரச்சனையைப் தீர்ப்பதாக உறுதியளித்தார். இதன் பின்னர் அடுத்த வாரத்தில் காலையில் இதே கோலம் போட்டு விட்டு விருதுநகர் ஆட்சித் தலைவரிடம் மீண்டும் சந்திக்க சென்றோம். அதே நேரத்தில் மாவட்ட வன அதிகாரியும் உடன் இருந்தார். இருவரையும் ஒரே நேரத்தில் சந்தித்தது ஒரு நல்ல வாய்ப்பாக இருந்தது. பின்னர் நவம்பர் 1 ல் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் மலையில் மேடு மேய்க்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது மலையில் மாடுமேய்க்கும் பிரச்சனைக்கு விதிப்படி அனுமதி இல்லையெனினும் மேய்த்து வர முடிகிறது. மலையை நம்பி வாழும் மக்களுடன் சேர்த்து வனத்தைப் பாதுகாக்கும் திட்டமே வெற்றிபெறும். இது சம்பந்தமாக 2026 வது ஆண்டை சர்வதேச மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்கள் ஆண்டென ஐ.நா.சபையும் அங்கீகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

விவேகானந்தன், சேவா

பஞ்சகவ்யா விரைவில் புளிக்க

பஞ்சகவ்யாவை தயார் செய்து பயிருக்குத் தெளிக்க குறைந்தது 21 நாட்கள் பிடிக்கும். பஞ்சகவ்யாவை விரைவில் புளிக்க ஏற்கனவே தயார் செய்து வைத்த

பஞ்சகவ்யா ஒரு லிட்டர் எடுத்து நாம் தயார் செய்யும் பஞ்சகவ்யாவில் ஊற்றி விட வேண்டும். அதாவது சாணி, நெய் சேர்த்து பிசைந்து வைத்த பின் 3 நாட்கள் கழித்து 4வது நாளில் தயிர், பால், கோமியம் சேர்க்கின்றோம். அப்போதே உரைமோர் போன்று ஏற்கனவே தயார் செய்த பஞ்சகவ்யாவை ஒரு லிட்டர் எடுத்து பேரலில் ஊற்றி விட வேண்டும். இதனால் பஞ்சகவ்யா 8 நாட்களில் தயாரிகிவிடும். அதாவது மொத்தம் 11 நாட்களில் புளித்து விடும். மொத்தத்தில் 10 நாட்கள் குறைந்து விடும். என்னுடைய 15 வருட கால அனுபவத்தில் இந்த உத்தியைப் பின்பற்றி வருகிறேன்.

தமிழ்மணி, வைத்தியலிங்கபுரம், ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலுகா. விருதுநகர் மாவட்டம், செல் : 9245134568

தனசேகரின் கால்நடை வைத்யம்

பசு மாடு, ஆடு போன்ற கால்நடைகள் மேய்ச்சலுக்கு சென்றுவிட்டு வரும்போது ஏதாவது பிளாஸ்டிக் குப்பைகளை மென்றுதின்று விடும். அவை அப்படியே கால்நடைகளின் வயிற்றிலுள்ள குடல் பகுதியில் அப்படியே ஒட்டி கொள்ளும். வயிறு உப்பிசமாகி தீனி எதுவும் சாப்பிடாமல் அசை போடாமல் இருக்கும்.

தீர்வு : ஒரு கைப்பிடி கறிவேப்பிலை, கசகசா 50 கிராம் நன்கு கருக வறுத்து அதனுடன் மஞ்சள் தூள், ஒரு கைபிடி சீரகம், நல்லெண்ணெய் 100 மி.லி ஆகியவற்றை துவையல் போன்று அரைத்து கால்நடைகளின் வாயில் சிறு சிறு உருண்டைகளாக தொண்டையில் போட்டு சுடு தண்ணீரில் உப்பு கலந்து உள்ளே செலுத்தினால் குடலில் ஒட்டிய பிளாஸ்டிக் பொருள் மலத்துடன் வெளியேறி விடும். மேலும் மாட்டுக்கு ஒரு கைப்பிடி முருங்கை இலை வாரத்தில் 2 நாட்கள் கொடுத்துப் பாருங்கள். அந்த கால்நடை 50 அடி தூரம் நீங்கள் இருந்தாலும் நன்றியுடன் உங்கள் அருகே வரும்.

உண்ணி தாக்குவதற்கு வைத்யம்

நாம் நம் வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகள் நாய், ஆடு, மாடு, குதிரை போன்றவைகளுக்கு உண்ணி தாக்கும் பின்பு அது விலங்குகளின் இரத்தத்தை உறிஞ்சி குடித்து துளையிட்டு சிறிது நாட்களில் கால்நடைகளை உயிர் இழக்க செய்து விடும்.

இதற்கு தீர்வு : கற்பூரம் (சூடம்) நான்கு வில்லைகள், தேங்காய் எண்ணெய் 50 மி.லி இரண்டையும் நன்கு குழைத்து இலகுவாக உண்ணி உள்ள இடத்தில் காலை, மாலை என 2 நாட்கள் சிறிது சிறிதாக உடலில் உள்ள உண்ணி மீது தடவி விட்டால் அந்த உண்ணி இறந்து மடிந்து விடும். கால்நடைகள் ஆரோக்கியமாக இருக்கும். விவசாயிகளே செய்து பாருங்கள் பலன் கிடைக்கும். நமது மன உளைச்சலும் தீர்ந்து விடும்.

குதிரையின் குளம்பு U வடிவம் அதன் உள்ளே சேற்றுப்புண் அதனை மிகவும் சிரமப்படுத்தும். அதற்கும் இதே தீர்வுதான் பின்பற்றப்பட வேண்டும்.

நா. தனசேகரன், 2/41, அக்ரஹாரம், சூலமங்கலம், பசுபதிகோவில் அஞ்சல், தஞ்சாவூர் – 614206

மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் வருமானம்

மரவள்ளிக்கிழங்கு ஓர் ஏக்கர் போட்டால் சர்வ சாதரணமாக ஒரு லட்ச ரூபாய் முதல் 1,20,000 வரை 3 மாதங்களில் பெறலாம். கொடி புடலங்காய் 100 குழி நிலத்தில் போட்டால் தினமும் ரூ.1500 முதல் ரூ. 2000 வரை 3 முதல் மாதத்தில் கிடைக்கும். தினமும் கை செலவு போக நமக்கு ரூ. 1500 கிடைக்கும். புடலை விதைக்கு ரூ. 100 செலவாகும். தண்ணீர் பாய்ச்சிய செலவு சுமார் ரூ.1000. 3 மாதத்திற்கு உரம் ஆட்டுபுழுக்கை வேப்பம் புண்ணாக்கு 2 கிலோ இது தான் செலவு. நம் வீட்டிற்கு தேவையான நீர்சத்துள்ள புடலங்காய் சாப்பிட்டுக் கொள்ளலாம். அதனுடன் ஊடு பயிராக செடி முருங்கை போட்டால் இரண்டு ஆண்டுகளில் நாம் சுமார் 15 லட்சத்திற்கு அதிபதியாக விடலாம்.

100 குழி நிலம் சொந்தமாக இருந்தால் போதும். பலா மரம் 5, தென்னைமரம் 5, மாமரம் 5, கொய்யாமரம் 5, பெட்டை ஆடு 5, ஒரு கிடா ஆடு இருந்தால் போதும் வருடம் சுமார் ரூ. 15 லட்சம் வரை கிடைக்கும். மாதம் சிறுக சிறுக ரூ. 1,20,000 லிருந்து ரூ. 1,40,000 வரை கிடைக்கும். தினமும் காலை, மாலை வயல் மேற்பார்வை வேலைக்கு ஓர் ஆள் போதும். ரூ. 5000 சம்பளத்துக்கு போட்டால் நமது கடன் எல்லாம் இல்லாமல் சுகமான வாழ்வு வாழலாம். ஒரு பெட்டை ஆடு வருடத்திற்கு 3 குட்டிகள் போடும் அது பல மடங்காக பெருகி நமது கஷ்டங்களை தீர்த்து விடும்.

நா. தனசேகரன், 2/41, அக்ரஹாரம், சூலமங்கலம், பசுபதிகோவில் அஞ்சல், தஞ்சாவூர் – 614206. செல் : 6380701690

இராஜேஸ்வரியின் சத்துணவு
உபயோகித்தவர்களின் அனுபவங்கள்

திருவையாறில் திருமதி. இராஜேஸ்வரி கடந்த 10 ஆண்டுகளாக மூலிகை, சிறுதானியங்களை கொண்டு சத்துணவுமாவு தயாரித்து வருகின்றார். இவரை பற்றிய கட்டுரை நம் வழி வேளாண்மை : பருவம் 30, ஏப்ரல் – ஜூன் 2020, இதழ் : 1 பக்கம் : 4 ல் பிரசரிக்கப்பட்டுள்ளது. இந்த சத்துணவு மாவை உபயோகப்படுத்தியவர்களின் அனுபவங்கள் பின்வருமாறு:

நான் கடந்த சில வருடங்களாக சுகா டயட்டின் சிறுதானிய உணவுகளை பயன்படுத்தி வருகின்றேன். பொதுவாக இதுபோன்ற உணவு வகைகள் ஆரோக்கியமாக இருந்தாலும் சுவையாக இருக்காது என்ற ஒரு கருத்து உண்டு. சுகா டயட் தயாரிப்புகள் அந்த கருத்தை தவிடு பொடி ஆக்கி விட்டது. ஆரோக்கியமும் அறுசுவையும் சேர்ந்த ஒரு உன்னத படைப்பு சுகா டயட் என்றால் அது மிகையாகாது. புதிதுபுதிதாக அவர்கள் வெளியிடும் தரமான தயாரிப்புகள் ஒவ்வொரு இந்திய பிரஜையையும் சென்று அடைந்து அனைவரையும் ஆரோக்கியமானவர்களாக ஆக்க வேண்டும் என்பது என் அவா!

காமாக்ஷி கணேசன், 18 ஏ, அம்மாள் அக்ரஹாரம்
திருவையாறு, தஞ்சாவூர் மாவட்டம் –613204

நான் பட்டுக்கோட்டையில் ஸ்ரீநாடி மருத்துவமனையில் கேன்டீன் வைத்துள்ளேன். இங்கு வருபவர்கள் திருமதி. இராஜேஸ்வரி தயாரிக்கும் சுகா டயட் மூலிகை தேனீர், மஞ்சள், மிளகு, பால் கூட்டு மாவு, அதிகமாக விரும்பி சாப்பிடுகின்றனர். சில நோயாளிகளும் இந்த சத்துணவு எடுத்து விரைவில் குணமாகியுள்ளனர்.

எஸ். சரவணக்குமார், பட்டுக்கோட்டை

திருமதி இராஜேஸ்வரி தயாரிக்கும் மஞ்சள், மிளகு கூட்டு மூலிகைப்பவுடர், நோய் எதிர்ப்பு மூலிகை தேனீர் பவுடர் நல்ல பலனைத் தருகின்றது.

சுபாசினி, தஞ்சாவூர். செல் : 9789367189

இராஜேஸ்வரி, சுகா டயட், திருவையாறு. செல் : 8608260308

படுத்த மாடு எழுந்த நடக்க

எங்கள் விவசாயக் கல்லூரிப் பண்ணையில் ஒரு கலப்பின பசுமாடு படுத்து எழாமல் இருந்தது. இதற்கு நாங்கள் மசால் உருண்டை தயார் செய்து கொடுத்தோம். இதனை 3 நாட்கள் செய்து வந்தோம். தற்பொழுது மாடு எழுந்து நிற்க முடிகிறது. இதற்கு நாங்கள் சேவாவிற்கு நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

கருப்புராஜ், வேளாண்மை கல்லூரி, காரைக்குடி,
செல் : 9489266298

ஆடு, மாடு சுகப்பிரசவம் அடைய

ஆடு, மாடுகள் ஈனும் சமயம் குட்டி வெளியேவராமல் கஷ்டப்படும். இதற்கு மாட்டு டாக்டர்கள் ஊசிபோட்டு விட்டு செல்வார்கள். சில டாக்டர்கள் குட்டியை வெளியே விரைவில் இழுத்துவிடுவர். இதனால் சில சமயம் குடலோடு சேர்ந்து உள்ள குட்டி வர சிரமப்படும், இறப்பும் ஏற்படும் இதற்கு கையில் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலில் தடவி உள்ளே கைவிட்டு கன்றின் நிலையை அறிந்துகொண்டு முன்னங்காலும், தலையும் முன்னே வருமாறு செய்து எடுக்க வேண்டும். இது போன்று பல மாடுகளுக்கு சுகப்பிரசவம் செய்து வருகிறேன்.

மசால் உருண்டையை கொடுக்கும் முறை

ஆடு, மாடுகளுக்கு நல்ல பலன்தரும் மசால் உருண்டையை கால்நடைகளுக்குத் தருவது சில நேரங்களில் எளிதாக இருப்பதில்லை. இந்த உருண்டையை ஆடு அல்லது மாட்டையும் பிடித்துப் போடுவதில் சிரமம் உண்டு. இதற்கு எளியமுறையாக மசால் உருண்டை தயார்செய்து நாட்டுச்சர்க்கரைத் தூளை மேல் தூவி கொடுத்துவிட்டால் மாடு நக்கிப் பார்த்து சுவையாயிருப்பதால் பின் முழு உருண்டையையும் சாப்பிட்டுவிடும். சில நேரங்களில் கால்நடைகளில் செரிமானப் பிரச்சனைகளுக்கு கால்நடை டாக்டர்கள் மாத்திரை வடிவில் நாக்கின் கீழ்ப்புறம் வைப்பர். இதுவும் சிரமமான வேலை. இதற்கு

நான் தயார் செய்யும் மூலிகை பவுடரை (கடுக்காய், ஆவாரம், சுக்கு, ஓமம் தூள் செய்து கலந்தது). குடிக்கும் நீரில் கலந்துவிட அல்லது வடிதண்ணீரில் கலந்துவிட எளிதாக எடுத்துக்கொள்ளும். இதில் நல்ல பலன் கிடைப்பதால் நான் தயாரிக்கும் மூலிகை பாக்கெட்டுகளை கால்நடை வளர்ப்போர் வாங்கிச் செல்கின்றனர்.

சித்ரா, கால்நடை தன்னார்வ பணியாளர், குட்டம், திசையன்விளை வழி, திருநெல்வேலி மாவட்டம். செல் : 6382039189

இயற்கை வேளாண்மை, கால்நடை மூலிகை வைத்ய தயாரிப்புகள்

தமிழ்நாட்டில் தமிழ்நாடு ஊரகவளர்ச்சி மேம்பாட்டு திட்டத்தில் எல்லா மாவட்டங்களிலும் (சென்னை, நீலகிரி தவிர) இயற்கை வேளாண்மை, கால்நடை மூலிகைவைத்ய பயிற்சி மகளிர் குழு உறுப்பினர்கள், தன்னார்வ சமுதாய உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுகிறது. 3 நாட்கள் பயிற்சியில் 2 நாட்கள் கால்நடை மூலிகை வைத்யமும் 1 நாளில் இயற்கை வேளாண்மை தயாரிப்புகள் கற்றுத்தரப்படுகிறது. இந்த பயிற்சி தேசிய பயிற்றுனர் திரு. விவேகானந்தன் உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது. இந்த பயிற்சிக்கு தேவையான பொருட்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தேவையான பாத்திரங்கள்:

குடம் – 1, பிளாஸ்டிக் ட்ரம் மூடியுடன் (50 லிட்டர் கொள்ளவு– 4), லிட்டர் படி – 1

பணங்கொட்டைகள் முளைப்பதற்கு

பொதுவாக பனங்கொட்டைகள் முளைப்பதற்கு நன்கு பழுத்த பனம்பழங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. இந்த பனம்பழங்களில் பூச்சித் தாக்குதல் காணப்படுகிறது. இதனால் பனம்பழங்களின் முளைப்புத்திறன் பாதிக்கப்படுகிறது. பழுத்த பனம்பழங்களுக்கு பதிலாக 3/4 பங்கு பழுத்த பனம்பழத்தை பயன்படுத்தினால் முளைப்புத்திறன் கூடும். நிலத்தில் 2 அடி ஆழம் தோண்டி அதில் 1 1/2 அடி வரை மண் போட்டு மேவி விட வேண்டும். பின்னர் 1/2 அடி உயரத்தில் பனம்பழங்களை பதித்து மண் போட்டு மூட வேண்டும். வாரம் ஒரு முறை நீர் தெளிக்க வேண்டும். நான்கு மாதங்களில் நன்கு முளைத்து நடவுக்கு பயன்படுத்தலாம். இவ்வாறு நடப்பட்ட பனம்பழங்கள் பழுத்த பனம்பழங்கள் முளைப்பதை விட 10 நாட்கள் அதிகம் எடுத்து கொள்ளும். அதாவது 30 நாட்களில் அல்லது 40 நாட்களில் முளைக்கும்.

அன்பையன், மார்த்தாண்டம், கன்னியாகுமரி மாவட்டம். தொடர்பு செல் : ஜேக்கப், பால்மா : 9486112560

இயற்கை வேளாண்மை தயாரிப்புகள்:

அமிர்தக்கரைசல் தயாரித்தல் : தயாரிக்கத் தேவையானவை : பசு சாணம் – 15 கிலோ, பசு கோமியம் – 15 லிட்டர், வெல்லம் – 1.5 கிலோ.

தயாரிக்கும் முறை : முதலில் பசு சாணம் மற்றும் பசு கோமியம் (பசும் சாணம் புதியதாக இருத்தல் வேண்டும்) இரண்டையும் ஒரு பாத்திரத்தில் அல்லது வாளியில் பிசைந்து சேர்க்க வேண்டும். இத்துடன் வெல்லத்தை தூள் செய்து சேர்க்க வேண்டும். இந்தக் கலவையை 2 நாட்கள் நிழலான இடத்தில் வைக்க வேண்டும். மேலும் அந்தக் கலவையில் கொசுக்கள் முட்டையிடுவதைத் தவிர்க்க பிளாஸ்டிக் அல்லது அட்டையை வைத்து மறைத்துக் கொள்ளலாம். இது ஓர் ஏக்கருக்கு ஒரு முறை பாசன நீரில் கலந்து விட போதுமானது. இதனை பயிர்களுக்கு தெளிக்கும் சமயம் ஒரு பங்குக் கரைசலுடன் 10 பங்கு தண்ணீர் சேர்த்து பயிர்களுக்குத் தெளிப்பான் மூலம் தெளிக்கலாம். ஓர் ஏக்கருக்குப் பத்து தெளிப்பான் டேங்க் அளவுக்குத் தெளிக்கலாம். கை தெளிப்பான் கொண்டு தெளிப்பது நல்லது. அமிர்தக்கரைசலை நிலத்தில் தெளித்த 24 மணி நேரத்தில் நுண்ணுயிர்கள் பெருகும். பயிர்கள் நோய் இல்லாமல் வளர உதவும். பொதுவாக 10 – 15

நாட்களுக்கு ஒரு முறை இந்தக் கரைசலைப் பயன்படுத்தலாம். இதனை பயிருக்கு 90 நாட்கள் வரை உபயோகிக்கலாம்.

பஞ்சகவ்யா தயாரித்தல் : பசு சாணம் – 5 கிலோ, நெய் – 1/2 கிலோ, பசு கோமியம் – 2 லிட்டர், பால் – 2 லிட்டர், தயிர் – 2 லிட்டர், வெல்லம் – 1/2 கிலோ, வாழைப்பழம் – 1 டஜன் (12 பழம்). முதலில் பசு சாணம், நெய் கலந்து 3 நாட்கள் கழித்த பின் மற்ற 4 பொருட்களையும் சேர்க்க வேண்டும். வெல்லத்தை 3 லிட்டர் நீரில் கலந்து சேர்க்க வேண்டும். பின்னர் அனைத்தையும் சேர்த்த கலவையை மேலும் 18 நாட்கள் (மொத்தம் 21 நாட்கள்) அப்படியே ஒரு டிரம்மில் வைத்து விட வேண்டும். இச்சமயத்தில் தினமும் 5 நிமிடம் நன்றாக குச்சியால் கலக்க வேண்டும். 21 நாட்கள் கழித்து பயிர் நிலங்களில் ஸ்பிரேயர் கொண்டு தெளிக்கலாம். ஒரு ஸ்பிரே டேங்கிற்கு அல்லது 10 லிட்டர் நீருக்கு 300 மி.லி. பஞ்சகவ்யா கலந்து தெளிக்கலாம். ஓர் ஏக்கருக்கு 3 லிட்டர் பஞ்சவ்யா கரைசல் தேவைப்படும். இதனை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம். இதனை பூசணி, சுரைக்காய், பப்பாளி, தர்ப்பூசணி பயிர்களுக்கு தெளிக்க கூடாது. ஆனால் வேரில்/ மண்ணில் ஊற்றலாம். முருங்கைக்கு 10 லிட்டர் நீருக்கு 200 மி.லி பஞ்சகவ்யா கலந்துதெளிக்க வேண்டும்.

மூலிகை பூச்சிக்கொல்லி மருந்து தயாரித்தல்

தயாரிக்கத் தேவையானவை : வேப்பங்கொட்டை – 1 கிலோ, சோற்றுக் கற்றாழை – 1 கிலோ, நொச்சி இலை – 1 கிலோ, எருக்க இலை – 1 கிலோ, ஆடாதொடை இலை 1 கிலோ.

தயாரித்துப் பயன்படுத்தும் முறை :

வேப்பங்கொட்டையை முதலில் 2–3 மணி நேரம் நீரில் ஊற வைக்க வேண்டும். இந்த பொருட்கள் அனைத்தையும் தனித்தனியாக அரைக்க வேண்டும். அரைக்கும் சமயம் சிறிது நீர் சேர்க்கலாம். பின்னர் அனைத்தையும் ஒன்று சேர்த்த கலவை சுமார் 7 லிட்டர் வரும். அல்லது 7 லிட்டர் வருவதற்கு சிறிது நீர் சேர்த்துக் கொள்ளலாம். இதனை ஓர் ஏக்கர் பயிருக்கு தெளிப்பதற்கு போதுமானது. இந்தக் கலவையை 3 நாட்கள் அப்படியே வைத்து விட வேண்டும். இதனை வடிகட்டிய பிறகு 700 மி.லி. மருந்துக் கரைசலை 10 லிட்டர் நீரில் சேர்த்து ஸ்பிரேயர் கொண்டு பயிர் நிலங்களில் தெளிக்கலாம். ஓர் ஏக்கருக்கு 10 டேங்க் தெளிக்க வேண்டும். பூச்சி நோய் தாக்குதலுக்கு ஏற்றவாறு இதனை இரு முறைகள் 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம். பஞ்சவ்யா தெளித்த பின் பூச்சி மருந்து மீண்டும் பஞ்சகவ்யா என மாறி மாறி 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம்.

பீஜாமிர்தம் தயார் செய்தல்

சாணம் 5 கிலோ, கோமியம் 5 லிட்டர், தண்ணீர் 20 லிட்டர், வரப்பு மண் ஒரு கைப்பிடி. மேற்கூறியவற்றை கலந்து வைக்க வேண்டும். இத்துடன் 12 மணி நேரம் கழித்து சுண்ணாம்பு (சுண்ணாம்பு 50 கிராம்) சேர்க்க வேண்டும். பொதுவாக நடவுக்கு விதையிட விதைகளை பீஜாமிர்தத்தில் 2 மணி நேரம் ஊற வைத்து பின்பு எடுத்து உலர வைத்து சணல் சாக்கில் கட்டி வைத்துக் கொள்வார்கள். ஆனால் நேரடி விதைப்புக்கு ஒரு பாலீதீன் படுதாவில் விதைகளை பரப்பி பின்பு பீஜாமிர்தத்தில் நனைத்தால் போதுமானது. பின்பு நிழலில் உலர வைத்து எடுத்து ஒரு சணல் சாக்கில் கட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

மீன் அமினோ அமிலம்

ஒரு கிலோ மீன் கழிவுடன் ஒரு கிலோ வெல்லம் (கழிவு வெல்லம் குறைந்த விலையில் கிடைக்கும்), வாழைப்பழம் 3 சேர்த்து ஒரு பாத்திரத்தில் அப்படியே 30 நாட்கள் வைத்து விடவும். இதிலிருந்து சுமார் 600–700 மி.லி. கரைசல் கிடைக்கும். இதனை தெளிப்பானில் 10 லிட்டர் நீருக்கு 100 மி.லி கரைசல் என்ற விகிதத்தில் சேர்த்து தெளிக்கலாம். நட்ட 20 நாளிலிருந்து 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க பயிர் இரசாயன உரம் இல்லாமலேயே செழித்து வளரும். ஓர் ஏக்கருக்கு போதுமானது.

ஜீவாமிர்தம்

தேசிய கிடைக்கார இளைஞர்கள் கூட்டம்

வரும் ஜனவரி மாதம் 20–21 (2023)ல் குஜராத்தில் கட்ச் பகுதியில் பூஜ் அருகே தேசிய கிடைக்காரர்கள் கூட்டம் நடைபெறுகின்றது. இதில் 40 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் கலந்துகொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு :

Ramesh Bhatti,
Sahjeevan, Bhuj, Gujarat.
Cell : 9978220515

மாட்டு சாணம் – 15 கிலோ, கோமியம் – 15 லிட்டர், வெல்லம் – 2 கிலோ, பயறு வகை 2 கிலோ (ஊற வைத்து அரைத்தது). பின்னர் ஒரு கைப்பிடி அளவு மண் நிலத்திலிருந்து எடுத்து போடவும். இதனை நன்கு கலந்து விட வேண்டும். இப்படியாக 2 நாட்கள் கலக்கவும். பின்னர் இந்தக் கரைசலை 10 லிட்டர் நீருக்கு 300 மி.லி. என்ற அளவில் கலந்து நிலத்திற்கு மண்ணில் ஊற்றலாம். அல்லது பாசனநீரில் கலந்து விடலாம். இது ஓர் ஏக்கருக்கு போதுமானது. இந்த கரைசலை ஒரு மாதம் வரை பயன்படுத்தலாம்.

கன ஜீவாமிர்தம்

உலர்ந்த மாட்டு சாணத்தை எடுத்து ஜீவாமிர்தம் கரைசலில் போட்டு உலர வைத்து சணல் பையில் போட்டு கட்டவும். இதனை எடுத்து பயிர்களுக்கு அடிப்பாகத்தில் தூவ வேண்டும். (கனஜீவாமிர்தம் தயாரிக்க பசும்சாணம் 100 கிலோ, 2 கிலோ வெல்லம், 2 கிலோ பயறு மாவு ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். உப்புமா பதம் வருவதற்கு எவ்வளவு தேவையோ அந்த அளவிற்கு நாட்டு மாட்டுக் கோமியத்தை சேர்க்க வேண்டும். பின்பு உருட்டி நிழலில் காய வைத்து தேவைப்படும் போது உதிர்த்துப் பயன்படுத்தலாம்).

உயிர் உரம் கொண்டு ஊட்டமேற்றிய தொழுஉரம் அளித்தல் :

ஊட்டமேற்றிய தொழுஉரம் ஓர் ஏக்கருக்கு 100 கிலோ இட வேண்டும். ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்க மக்கிய தொழுஉரம் 100 கிலோவில் சூடோமோனஸ், பாஸ்போபேக்டீரியம், அசோஸ்பைரில்லம் தலா 2 கிலோ கலந்து வைக்க வேண்டும். இந்த கலவையில் 10 லிட்டர் நீரில் ஒரு கிலோ சர்க்கரை கலந்த கரைசல் தெளிக்க வேண்டும். ஒரு வாரம் வைத்து பெருக்கி பின்னர் நெல்லுக்கு உரமாக இடலாம். பஞ்சகவ்யாவுடன் சூடோமோனஸ் விரிடிஸ் டேங்கிற்கு 100 கிராம் சேர்த்து தெளித்தால் பயிருக்கு நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். அமிர்தக்கரைசலுடன் பாஸ்போபேக்டீரியம், அசோஸ்பைரில்லம் ஏக்கருக்கு 2 கிலோ கலந்து நீர்ப்பாசனம் செய்யலாம்.

உயிர் உரங்களை விதை நேர்த்தி/மண்ணிற்கு இடுதல் / பயிருக்கு தெளித்தல்

உயிர் உரங்களை 5–7 கிராம் அளவு எடுத்து ஒரு கிலோ விதைக்கு பயன்படுத்தலாம். அரிசி கஞ்சி 1/2 லிட்டர் அல்லது மைதா மாவுடன் பிசைந்து விதை நேர்த்தி செய்யலாம். இரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளை சேர்க்கக்கூடாது.

பாஸ்போ பாக்டீரியம்: நமது மண்ணில் மணிச்சத்து உரத்தை எடுத்து தாவரத்திற்குக் கொடுக்கும்.

அசோஸ்பைரில்லம்: காற்றில் உள்ள தழைச்சத்தை எடுத்து மண்ணிற்கு சேர்க்கும். நெல், பருத்தி, கம்பு, சோளம், கரும்பு, காய்கறி பயிர்களுக்கு இதனை பயன்படுத்தலாம். இதனை ஓர் ஏக்கருக்கு 250 மி.லி. தொழுஉரத்தில் கலந்து தூவலாம் அல்லது விதை நேர்த்தியும் செய்யலாம்.

ரைசோபியம் : காற்றில் உள்ள தழைசத்தை எடுத்து வேர் பகுதிக்கு சேர்க்கும். இதனை பயறு வகை செடிகளுக்கு (உளுந்து, பாசி பயறு, துவரை, நிலக்கடலை, அவரை) பயன்படுத்தலாம்.

பேசில்லஸ்: மண்ணில் வேர் அழுகல் நோய், இலைபுள்ளி நோய் வருவதை தடுக்கும். இதனை 10 கிராம் எடுத்து ஒரு லிட்டர் நீரில் கரைத்து நாற்றுகளை 15 நிமிடங்கள் நனைத்து நடவு செய்யலாம். பயிர்மேல் தெளிக்கலாம் அல்லது நிலத்தில் தொழு உரத்துடன் கலந்து தூவலாம்.

நீல பச்சை பாசி : ஓர் ஏக்கருக்கு 4 கிலோ இடுவது 15–20 கிலோ யூரியா போடுவதற்கு சமம்.

மேலும் விவரங்களுக்கு : இயற்கை விவசாயிகள் :
செல்லமுத்து, கொடுமுடி – 9486602389,
செல்லப்பா, சீர்காழி – 9487884468,
தமிழ்மணி, ஸ்ரீவில்லிபுத்தூர் – 9245134568

கால்நடை மூலிகை வைத்ய தயாரிப்புகள்

பொள்ளாச்சி தாலுகா சுப்பேகவுண்டன்புதூரில் மகளிர் குழு உறுப்பினர்கள் மசாலா உருண்டை தயார் செய்தல் –08.12.2022

1) மசால் உருண்டை தயார் செய்தல்: இதனை வயிறு சம்மந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு, நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகக் கொடுக்கலாம்.

சிறுதும்பை, குப்பைமேனி, வீலி, உசிலை, துளசி, ஆவாரம்பூ, சீந்தில், மூங்கில்இலை, துத்தி, கொளுஞ்சி, முடக்கத்தான், நிலவேம்பு, கொய்யாகொழுந்து இலை, வெற்றிலை, பிரண்டை ஒவ்வொன்றும் 100 கிராம், சோற்று கற்றாழை 1/4 கிலோ, சிறுவெங்காயம் 100 கிராம், ஒரு தேங்காய் துருவல், வெள்ளைப்பூண்டு 100 கிராம், வெல்லம் 500 கிராம் இவைகளை அரைத்து உருண்டையாக எலுமிச்சம்பழ அளவு பிடித்து மஞ்சள் தூளில் உருட்டி எடுக்க வேண்டும். இதிலிருந்து சுமார் 50 உருண்டைகள் கிடைக்கும். இந்த உருண்டைகளை 3 நாட்களுக்குள் பயன்படுத்தினால் நன்று. ஒரு வாரம் வரை உலர்ந்த இடத்தில் நீர் படாமல் நிழலில் வைத்தும் பயன்படுத்தலாம். இதனை மூடி வைக்காமல் காற்றோட்டமாக இருக்க வேண்டும். மாட்டிற்கு மாதத்திற்கு ஒலு உருண்டை போட வேண்டும். கன்று, ஆடுகளுக்கு பாதி அளவு போட்டால் போதும். இதனால் வயிறு உப்பிசம், அஜீரணம், தீனி தின்னாமை ஆகியவற்றிற்கு நிவாரணம் கிடைக்கும். இது தவிர வயிற்றுக் கிருமி, கோமாரி நோய், மடிநோய் ஆகியவற்றிற்கு வரும் முன் காப்பு மருந்தாக செயல்படும். மசால் உருண்டை போட்ட பின் உப்பு, புளி கலந்து நாக்கின் மீது தேய்த்து விட வேண்டும். கோழிகளுக்கு ஏற்பாடும் இராணிக்கெட் அல்லது வெள்ளைக்கழிச்சல் நோய்க்கு ஒரு மசால் உருண்டையை 5 கோழிகளுக்கு கொடுக்கலாம். இதனை ஒரு வாரம் வரை கொடுத்து வர வேண்டும்.

2) மத்தான் தைலம் தயார் செய்தல் (ஆறாத, புழு வைத்த புண்களுக்கு)

மத்தான் தைலம் தயார் செய்து புண்களில் தடவி வரலாம். மத்தான் தைலம் தயாரிக்க 500 மி.லி தேங்காய் எண்ணெயில் 500 மி.லி ஊமத்தை இலை சாறு விட்டு சுமார் 1–2 மணி நேரம் பதம் வரும் வரை காய்ச்ச வேண்டும். காய்ச்சி இறக்கிய பின் 5 கிராம் மயில் துத்தம் சேர்த்து கிண்ட வேண்டும். இதனை பாட்டிலில் ஊற்றி வைத்து கொண்டு தேவைப்படும் போது புண்கள், தோல் பத்து போன்றவற்றிற்கு உபயோகப்படுத்தலாம்.

3) குடற்புழு நீக்க மருந்து தயார் செய்தல்

சோற்றுக்கற்றாழை, நொச்சிதழை, ஆடாதொடை அல்லது பீநாரிசங்கு, எருக்கழை, வேப்பங்கொட்டை ஒவ்வொன்றும் ஒரு கிலோ அளவு எடுத்து இடித்து பின்னர் மிக்சியில் போட்டு அரைக்க வேண்டும். இதை வடிகட்டி வைத்துக்கொள்ள வேண்டும். இதிலிருந்து 50 மி.லி மாட்டுக்கும், 20–25 மி.லி. கன்றுகள் அல்லது ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்தாகக் கொடுக்கலாம். இதனை மாதத்திற்கு ஒரு முறை கொடுத்து வர வேண்டும்.

4) மடிநோய் களிம்பு தயார் செய்தல்

சோற்றுகற்றாலை 200 கிராம், மஞ்சள் கிழங்கு 100 கிராம், சுண்ணாம்பு 10 கிராம் சேர்த்து களிம்பாக அரைக்க வேண்டும். இதனை மடிநோய்க்கு வெளிப்பூச்சாக பூச வேண்டும். உள்ளே வாய் வழியாக சோடா உப்பு 50 கிராம், 2 எலுமிச்சம்பழ சாறு, வெல்லம் 100 கிராம் சேர்த்து நீரில் கலந்து கொடுக்க வேண்டும்.

5) **பேன், உன்னி தைலம்**

வேப்ப எண்ணெய் 1/2 லிட்டர் அல்லது புங்கை எண்ணெய் 1/2 லிட்டர் எடுத்து இதில் கற்பூரம் 5 எண்ணம், கந்தகம் 50 கிராம் சேர்த்து நன்கு கலக்க வேண்டும். இதனை வெளிப்பூச்சாக ஆடு

மாடுகளுக்கு தடவ வேண்டும். ஒரு நாள் கழித்து குளிப்பாட்டி விடலாம்.

உன்னிச்செடி என்ற லன்டானா (Lantana) செடியை சுமார் 2 கிலோ எடுத்து சிறிது சிறிதாக நறுக்கி மாட்டு கோமியத்தில் 3 நாட்கள் ஊற வைக்க வேண்டும். பின்னர் இதனை எடுத்து மாட்டின் உடம்பின் மேல் அழுத்தி தேய்த்து விட வேண்டும்.

தொகுப்பு : பெ. விவேகானந்தன், சேவா

மாட்டு காய்ச்சலுக்கு

அறிகுறிகள் : நான்கு கால்களும் நடுங்கும்; உடல் புல்லரிக்கும்; உடம்பு அதிகமான வெப்பமாக இருக்கும்; வாய், கண்களிலிருந்து நீர் வடியும்; தீவனம் தின்னாது; பால் கொடுக்காது. வைத்தியம்: வேப்ப கொட்டை 200 கிராம் எடுத்து ஒரு மண்பானையில் தீ கங்கு எடுத்து அதில் 200 கிராம் வேப்பங்கொட்டை இட்டு இதில் வரும் புகையை மாட்டுக்கு காட்ட வேண்டும். மஞ்சள் பொடி, மிளகு, பூண்டு, ஓமம் ஒவ்வொன்றும் 5 கிராம் அளவு எடுத்து அரைத்து சுடு தண்ணீரில் கலந்து ஒரு நாளைக்கு 2 வேளை உள்ளுக்குள் கொடுக்க வேண்டும். இத்துடன் அரிசி மாவு அல்லது கம்பு மாவு 1/2 கிலோ எடுத்து கஞ்சி போன்று காய்ச்சி கொடுக்க வேண்டும். மாடுகளுக்கு குடிப்பதற்கு காய்ச்சி ஆறிய தண்ணீரை மட்டும் கொடுக்க வேண்டும். மாடுகளுக்கு காய்ந்த தட்டை அல்லது வைக்கோல் போடலாம். பச்சை புல் போட கூடாது.

எஸ்.எம். ஆறுமுகம் (லேட்), எழுவணி, முக்குளம் அஞ்சல், திருப்புவனம் வழி, விருதுநகர் மாவட்டம்

நெல்லில் தண்டுப்புழு அல்லது குருத்துப்பூச்சி வந்தால்

நெல்லில் தண்டுப்புழு அல்லது குருத்துப்பூச்சி வந்தால் எருவரட்டி 5 எடுத்து இதை 3 லிட்டர் மண்ணெண்ணெயில் ஊற வைக்க வேண்டும். எருவரட்டிக்குப் பதில் தவிடு 3 மரக்கால் பயன்படுத்தலாம். இதனை நெல் வயலில் அரை அடி அளவு உயரம் நீர்கட்டி பின்னர் தூவி விட வேண்டும். இதனால் மண்ணெண்ணெய் வாசத்திற்கு தண்டுப்புழுக்கள் அழிந்துவிடும்.

செல்லப்பா, இலையமுதுகூடம், சீர்காழி தாலுகா

அத்திமலைப்பட்டு கோசலா

திருவண்ணாமலை மாவட்டம், போலூர் தாலுகா, அத்திமலைப்பட்டு கிராமத்தில் திரு. கணேஷ் சாஸ்திரி அவர்களுக்கு சொந்தமான கோசாலாவில் 13 காங்க்ரேஜ்மாடுகள் உள்ளன. இப்பண்ணையில் 2 ஏக்கர் நிலத்தில் சீரகசம்பா, தூயமல்லி, நெல்ரகங்கள் பயிர் செய்யப்படுகின்றன. இந்த பண்ணையை திரு. ஆறுமுகம் நிர்வாகம் செய்து வருகிறார். இவர் நெல் நட்ட 2 வாரத்திலிருந்து ஜீவாமிருதம் கரைசல் வாரம் ஒரு முறை தருகிறார். பஞ்சகவ்யாவை 2 தடவை கொடுக்கிறார். பூ எடுக்கும் சமயம் தேங்காய், மோர் கரைசல் (10 தேங்காய் துருவி அரைத்து 2 லிட்டர் மோரில் கலந்து 7 நாட்கள் புளிக்க விட வேண்டும். இதிலிருந்து 100 மி.லி. எடுத்து 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்) 2 தடவை தெளிக்கிறார். இப்பண்ணையில் நாட்டு காங்க்ரேஜ் மாடுகளை வைத்து இயற்கை தயாரிப்புகள் செய்து வருகிறார். சுத்தமான விபூதி தயாரித்து விநியோகித்து வருகிறார்.

ஆறுமுகம், அத்திமலைப்பட்டு, ஒண்ணுபுரம் (வழி) போலூர் தாலுகா, செல் : 8489986369

மக்கள் கண்டுபிடிப்பு திருவிழா

புதுடில்லியில் நவம்பர் மாதம் 19 லிருந்து 29 வரை மக்கள் கண்டுபிடிப்பு திருவிழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை அஹமதாபாத்தில் உள்ள கியான் மற்றும் "இந்தியா இன்டர்நேசனல்" என்ற

நிறுவனங்கள் ஏற்பாடு செய்திருந்தன. இதில் பல மாநிலங்களிலிருந்து அடித்தள கண்டுபிடிப் பாளர்கள், அறிவியல் வல்லுநர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளை கண்காட்சியில் வைத்து விளக்கம் அளித்தனர். இந்த கண்காட்சியில் முக்கிய கண்டுபிடிப்புகளாக கீழ்க்கண்ட கண்டுபிடிப்புகள் இடம் பெற்றிருந்தன:

வாழைமரத்திலிருந்து நாறு எடுத்து கூடை பின்னும் கருவி – முருகேசன், கழிப்பறை கட்டில் – சரவணமுத்து, மண்பானை சாமான்களில் புதிய கண்டுபிடிப்புகள் – மன்சூக்பாய். மீன்களுக்கு தாவர உணவு – ஜக்சம்குப்தா, சோலார் டிராக்டர் – ராகுல் சிங், எலெக்ட்ரானிக் ஜக்காடு– சிவக்குமார் மோதா, கையால் தூக்கி செல்லும் சிறிய மைக்ரோஸ்கோப் – மாதவ்ஆரியா, புதிய கேரட் ரகம்– சந்தோஷ் பச்சார், பல்நோக்கு ஜுஸ், ஜாம், தேனீர் தயாரிக்கும் கருவி – தரம்வீர்சிங், நுண்ணுயிர்கள் கொண்டு கழிவு நீரை சுத்தமான நீராக மாற்றுதல் – REVY Environmental Solutions Pvt.Ltd.

கண்டுபிடிப்பு திருவிழாவில் துவக்கவுரை ஆற்றிய இந்தியா இன்டர்நேசனல் தலைவர் திரு சியாம் சரண் அடித்தள கண்டுபிடிப்பாளர்களுக்கும் அறிவியல் வல்லுநர்களுக்கும் ஒரு பாலமாக இந்த கண்டுபிடிப்பு திருவிழா அமையும் எனக் கூறினார்.

GIAN, B-1, Satellite Complex,
Nr. Mansi Cross Road, Satellite
Ahmedabad -380015

அந்தமான் தீவில் பின்பற்றப்படும் கால்நடை வைத்யம்

அந்தமான் நிக்கோபர் தீவில் 23.8.22 அன்று நடைபெற்ற மகளிர்குழு உறுப்பினர்களுக்கான கால்நடை மூலிகை வைத்ய பயிற்சியில் தொகுக்கப்பட்ட பாரம்பரிய உத்திகள் பின்வருமாறு.

கோழி கழிச்சலுக்கு

பச்சை கலரில் கழிச்சல் ஏற்படும். கோழிகள் மயங்கி சில நாட்களில் இறந்துவிடும். இதற்கு இஞ்சி, பூண்டு, குப்பைமேனி இலை, மஞ்சள் சேர்த்து அரைத்து தீனியில் கலந்து கொடுக்க வேண்டும்.

கோழிகள் கண் பிரச்சனைக்கு

கடுகு எண்ணெய் கண்ணில் 1–2 சொட்டு விட வேண்டும்.

வாய்ப்புண், கால்புண்ணுக்கு

மாடுகளில் கால்காணை, வாய்க்காணைகளினால் ஏற்படும் புண்களில் மஞ்சள், கற்பூரம் சேர்த்து சுடு எண்ணெயில் கலந்து வெளியே பூச வேண்டும். இதை தடவும் முன்னர் சுடு தண்ணீரில் உப்பு கலந்து புண் பகுதியை கழுவி விட வேண்டும்.

புழு வைத்த புண்ணுக்கு

புகையிலை சீனி சேர்த்து அரைத்து புண்ணில் தடவ வேண்டும். பெட்ரோல் சொட்டு புண்ணில் விட வேண்டும்.

பேன், உண்ணிகளுக்கு

தேங்காய் எண்ணெயில் கற்பூரம் தூள் சேர்த்து உடல் முழுவதும் பூச வேண்டும். அல்லது வேப்ப இலை, மஞ்சள், கற்பூரம், உப்பு சேர்த்து அரைத்து உடம்பில் பூச வேண்டும்.

வயிற்றோட்டத்திற்கு

சப்போட்டா காயை அரைத்து உள்ளே தர வேண்டும்.

மாடுகளுக்கு காணை நோய் வந்தால்

வாயில் உமிழ்நீர் வடியும். இதற்கு வாழைப்பழத்தில் பெருங்காயம் சேர்த்து உள்ளே தர வேண்டும். இத்துடன் நாட்டுக்கோழி முட்டை உள்ளே தர வேண்டும். சாம்பிராணி புகை போட வேண்டும்.

மாடு கழுத்துப்பகுதியில் ஏற்படும் புண்ணுக்கு

மஞ்சள் அரைத்து வேப்ப எண்ணெயில் கலந்து புண் பகுதியில் பூச வேண்டும்.

குடற்புழுவிற்கு

கரிசலாங்கண்ணி, வேப்ப இலை அரைத்து கடுகு எண்ணெயில் சேர்த்து காய்ச்ச வேண்டும். இதனை டிகட்டி மாடுகளுக்கு 50 மி.லி உள்ளே தர வேண்டும்.

மகளிர் சுயஉதவிக்குழு விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை மற்றும் கால்நடை மூலிகை வைத்தியப் பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் 2022–2023 ஆண்டு செயல் திட்டத்தின் கீழ் 47 வட்டாரங்களில் (26 மாவட்டங்களில்) மகளிர் சுயஉதவிக்குழு விவசாயிகளுக்கு 3 நாட்கள் பயிற்சி (2 நாட்கள் கால்நடை மூலிகை வைத்யம் + ஒரு நாள் இயற்கை வேளாண்மை இடு பொருட்கள் தயாரிப்பு பயிற்சி) ஏற்பாடு செய்யப்பட்டு டிசம்பர் 2022–லிருந்து – ஜனவரி 2023 வரை நடைபெற்று வருகிறது.

மேலும் விபரங்களுக்கு : மாவட்ட திட்ட இயக்குநர், மகளிர் திட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம்

Digital support is provided by : www.NamFarmers.com Cell : 91 948 968 7000
E-mail : support@namfarmers.com

நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம் ;

	வருட சந்தா ரூபாய்	ஆயுள் சந்தா ரூபாய் ;
நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள்	200	2000
விவசாயிகள் / தனிநபர்கள்	150	1500
தனிப்பிரதி	30	----
15 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1250)	1500	----

+ (கொரியர் செலவு ரூ. 250)

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா"
மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா சேவா
மதுரை – கோச்சடை கிளை 45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
SB A/C No – 493902010004241 மதுரை – 625016
IFC Code : UBIN0549398 தொலைபேசி : 0452–2380082 , 2380943

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

பெறுநர்

நூல் அஞ்சல்

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 2380943
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in

NamFarmers.com

2.5 லட்சத்திற்கும் மேல் விவசாயிகள் இலவசமாக இணைந்துள்ளார்கள்

மொபைல் செயலி பதிவிறக்கம்

இந்தியாவில், விவசாய மேன்மைக்காக பயன்பாட்டில் இருந்து வந்த எமது Farmer.Live வலைதளத்தை தற்போது மேலும் பல சிறப்புகளுடன், பிரம்மாண்டமாக புதிய பொலிவில் www.NamFarmers.com ஆக உங்களுக்கு அறிமுகப்படுத்துவதில் தாரா புளூம்ஸ் பிரைவேட் லிமிடெட் குழுமம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது.

NamFarmers.com உலகெங்கிலும் உள்ள விவசாய பங்குதாரர்களை ஒன்றிணைப்பதோடு, அவர்களின் பல்வேறு விவசாயத் தேவைகளையும், தகவல் பரிமாற்றத்தையும் பூர்த்தி செய்யும் ஒரு "சிறந்த தளமாகும்".

இலவச பதிவு

தனித்துவமான முகப்பு பக்கம்

11+ மொழிகள்

தினமும் 2000+ விவசாயிகள் சேர்ந்து பயன்பெறுகின்றனர்

- ஆன்லைன் வேளாண் சமூக வலைதளம்.
- இலவச டிஜிட்டல் வேளாண் மாத இதழ்கள்.
- உங்களின் புதிய வேளாண் தொழில்முனைவு உருவாக்கி கொள்ளும் வசதி.
- விவசாயம் சார்ந்த சந்தேகங்களுக்கு தீர்வுகளை கலையாக வழுதல்.
- முக்கிய வேளாண் செய்திகள் மற்றும் தகவல் பரிமாற்றம்.
- சிறந்த ஆன்லைன் சந்தை.
- உலகளாவிய வேளாண் பொருட்களின் சந்தை மதிப்பை ஒப்பிடுதல்.
- தங்களின் விவசாய அனுபவங்களை, கட்டுரைகள் மற்றும் வீடியோக்கள் மூலமாக பகிர்ந்து கொள்ளல்.
- நடைபெறும்போகும் விவசாய கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் குறித்த தகவல்கள்.
- உலகெங்கிலும் உள்ள விவசாய மக்களுடன், வியாபாரிகள் மற்றும் வேளாண் நிறுவனங்கள் கலந்துரையாடல்.
- அக்ரி டைரக்டரி தகவல்களுக்கான இலவச அனுமதி.
- "அக்ரி ஜாப் போர்டல்" மூலம் மாணவர்கள் தங்களுக்கு ஏற்ற சிறந்த வேலையை தேர்ந்தெடுக்கும் வசதி.
- வேளாண் நிறுவனங்கள், விவசாய பொருட்களை காட்சிப்படுத்திட வாய்ப்பு.

இன்றே பதிவு செய்யுங்கள்

T&C's Apply

+91 938 4842 373 | +91 770 8222 822 | support@namfarmers.com